பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 186

ஞாயிற்றுக்கிழமை
01 ஜூன் 2025

வைகாசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**படையினரிடம் ஒப்படைத்த உறவுகள் எங்கே?**

முல்லையில் போராட்டம்

விரிவு பக்:-04

யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீரைக் கொண்டுவரும்

# பாலியாற்றுக் குடிதண்ணீர் திட்டத்துக்கு வன உயிரிகள் திணைக்களத்தால் ஆப்பு

## இரணைமடுத் திட்டத்துக்குச் செல்லுமாறும் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 1

பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வனப்பகுதியை வழங்குவதற்கு வன உயிரிகள் திணைக்களம் திட்டவட்டமாக மறுத்துள்ளதால், குறித்த திட்டம் முடங்கிப்போயுள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது. பதிலாக, இரணைமடுக் குடிதண்ணீர் திட்டத்தை முன்னெடுப்பதே பொருத்தமானது என்று வன உயிரிகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

14

## பாலியாற்றுத் திட்டம் தொடர்பில் இந்த மாதம் மீண்டும் கள ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடக்கு மாகாணத்திலுள்ள பல்லாயிரம் குடும்பங்களுக்குத் தண்ணீரை வழங்கக்கூடிய பாலியாற்றுத் திட்டம் தொடர்பில் இந்த மாதம் மீண்டும் கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத்

14

## இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை

பூநகரியில் கொடூரம்

கிளிநொச்சி, ஜூன் 1
கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
பூநகரி - தம்பிராய் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

14

## இலங்கையில் தொடர்ந்தும் புலிகள்மீது தடை!

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்வதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் துயகொந்தாவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் நபர்களின் விவரங்களை இலங்கை அரசாங்கம் புதுப்பித்துள்ளது. இதன்படி, 15 அமைப்புகள் மற்றும் 217 நபர்களுக்குத் தற்போதும் தடை தொடர்வதாக புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

14

## உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் விவரம்; வெளியானது வர்த்தமானி

கொழும்பு, ஜூன் 1
உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் விவரங்கள், அரச வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.
அண்மையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. நாளையதினம் சபைகளில் ஆட்சியமைக்கும்

14




'இப்பிடி மாறி மாறி இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருந்தால் எப்பிடி தண்ணி கிடைக்கும்?'

## ஊழல் மோசடியாளர்கள் தப்பியோடுவதற்கு முடிவு

சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 1
ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள சில அரசியல்வாதிகளும், அவர்களின் உறவினர்களும் நாட்டைவிட்டு தப்பியோடுவதற்கு முற்படுகின்றனர் என உளவுப்

14

இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட

## 123 இழுவைமடிப் படகுகளை கடலில் மூழ்கடிக்கத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1
அத்துமீறிய மீன்பிடிக்காகக் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் 123 இழுவைமடிப் படகுகளை, இலங்கையின் கடலெல்லையில் மூழ்கடிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதன்போது, அத்துமீறிய

14

சீரற்ற காலநிலைப் பாதிப்பு

## இழப்பீடு வழங்க 100 கோடி ரூபா

விரிவு பக்கம் - 14

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனங்களில் நிலைபெற்ற தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4088 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 24 55 70 80 |
| விசேட எழுத்து | S |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1155 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 27 29 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0114 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 2 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2194 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 22 27 30 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5846 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 6 9 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1876 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 21 40 50 69 |
| விசேட எழுத்து | E |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 31.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0421 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 7 3 |

**கடந்த 31.06.2025 தேசிய லொத்தர் சபை NLB அபிவிருத்தி லொத்தர் முடிவுகள் தொழிநுட்பக் கோளாறுகள் காரணமாக தவறாக வெளிவந்து விட்டது. குறித்த திகதிக்கான சரியான விளம்பரம் இன்றையதினம் பிரசுரமாகி உள்ளது.**

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0113 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 5 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2193 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 03 04 49 59 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5845 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 1 3 4 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1875 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 30 59 64 72 |
| விசேட எழுத்து | L |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0420 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 1 3 4 7 |

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4087 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 06 08 15 78 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1154 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 40 47 60 |

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | U | 4 6 5 0 0 8 | 0553 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | 2819 | Y | 04 43 54 71 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | M | 13 30 56 61 | 4980 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | 0693 | 02 03 40 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | ♎ | 39 41 49 50 | 4531 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | R | 03 | 36 42 55 56 | 1995 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.05.2025 | வெள்ளிக்கிழமை | C | 01 10 32 37 | 2645 |

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | X | 7 5 7 8 2 6 | 0554 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | 2820 | I | 09 11 12 37 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | Q | 02 13 55 74 | 4981 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | 0694 | 22 25 30 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | ♎ | 01 02 44 52 | 4532 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | U | 32 | 05 07 20 51 | 1996 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 31.05.2025 | சனிக்கிழமை | O | 05 10 15 56 | 2646 |

# இலஞ்சம்பெற்ற பொலிஸ் கைது

திருகோணமலை, ஜூன் 1

திருகோணமலையில் 17 வயது சிறுவனிடம் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

17 வயது சிறுவன் ஒருவன் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்காமல் இருக்க 10,000 ரூபா இலஞ்சமாக கோரியதாக அவருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-28)

# கசிப்புடன் கைதானவருக்கு ரூ. ஒரு இலட்சம் தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

உடுவில் பகுதியில் கசிப்புடன் கைதான சந்தேகநபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக உடுவில் மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றினை முற்றுகையிட்டு மானிப்பாய் பொலிஸார் சோதனையை முன்னெடுத்தபோது 5 போத்தல் கசிப்பு, 3 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கோடா ஆகியவற்றுடன் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். (ச-125)

# தாயகம் திரும்பியவர் சட்டத்தின்படியே கைது

## பிமல் விளக்கம்



கொழும்பு, ஜூன் 1

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியவர்களைக் கைதுசெய்யப் பயன்படுத்தப்படும் சட்டத்தின் கீழே தமிழ்நாடு அகதி முகாமிலிருந்து தாயகம் திரும்பியவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடகப்பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சட்டத்தின் அடிப்படையிலேயே தமிழக அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது அரசாங்கக் கொள்கையில்லை, நாட்டின் பழைய சட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் ஆனந்த விஜயபாலவுடன் கதைத்தேன் அவர் இந்தச் சட்டத்தை மாற்றுவதாக தெரிவித்துள்ளார் - என்றார். (ச-இ)

# கலாநிதி சுதர்சினி உபேந்திரன் பேராசிரியராகப் பதவியுயர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக்கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பௌதிகவியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. சுதர்சினி உபேந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கமைய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரன் பௌதிகவியல்துறையில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தெற்கு அதிகாரிகள் முட்டுக்கட்டை

## உலக வங்கிக் குழுவினரிடம் வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 1**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தபோதும், கொழும்பிலுள்ள சில திணைக்களங்களின் அதிகாரிகள் அவற்றுக்கு முட்டுக்கட்டைபோடும் விதத்தில் செயற்படுகின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

உலக வங்கியின் இலங்கை நாட்டுக்கான செயற்பாட்டு முகாமையாளர் அபிட் கலி செயற்றிட்டத் தலைவர் காயத்திரி சிங் உள்ளிட்ட உலக வங்கிக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். கடந்த 3 தசாப்தங்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்தக் காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவொரு உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் இங்கிருந்த உட்கட்டுமானங்களும் முழுமையாக அழிவடைந்துள்ளன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உலக வங்கியை வடக்கு - கிழக்கின் துரித அபிவிருத்தியில் கவனம்செலுத்துமாறு கோரியிருந்தார்.

எனினும் போரால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை ஒருபோதும் வந்து பார்வையிடாத அதிகாரிகள் சிலர் கொழும்பிலிருந்துகொண்டு உலக வங்கியின் திட்டங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு ஏன் வழங்கப்படுகின்றன என்று கேள்வி எழுப்புவது பொருத்தமற்றது. அவர்களும் இங்கு வந்துநிலைமைகளைப் பார்வையிட்டால் எமது கோரிக்கைகளின் நியாயத்தன்மையை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். (ச-113)



# பலத்த காற்று மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 1

சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

அதனால், கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று கடல்சார் மற்றும் மீனவ சமூகத்தினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஊதிய முரண்பாடுகள் காரணமாக

# பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் நாளைமறுதினம் வேலைநிறுத்தப் போர்

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் நாளைமறுதினம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஊதிய மறுபரிசீலனையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ள போதிலும், அரசாங்கம் அந்தக் கருத்துக்களைகவனத்திற்கொள்ளவில்லை. இதையடுத்தே, நாளைமறுதினம் பல்கலைக்கழகஆசிரியர்சங்கசம்மேளனம்வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது. (ம-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 02 . 1937

இறப்பு 31 . 05 . 2025



**திருமதி நாகலிங்கம் சரஸ்வதி**

மீசாலை மேற்கு பங்களா வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சரஸ்வதி அவர்கள் நேற்று (31.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-அன்னம்மா தம்பதியின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை-மயிலி தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பூ.நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தங்கவேல் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் பிரதேசசபை-சாவகச்சேரி), இன்பராணி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை-சாவகச்சேரி), சிறீகரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), கருணாகரன் (அதிபர்-கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனஞ்செயன் (முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம்-மீசாலை), கமலேஸ்வரி, குகானந்தவதனா, நவதர்ஷினி (விரிவுரையாளர்-யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திவாகரன் (CAB-விவசாயத் திணைக்களம், விவசாய போதனாசிரியர்), திருநீலன் (லண்டன்), ஜெகபிரசங்கா (மாணவி-விவசாயக் கல்லூரி-வவுனியா), அருணன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன்), அபிசாளினி (மாணவி-விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கிருஸ்ணபிரியன் (மாணவன்-விஞ்ஞானபீடம்,களனி பல்கலைக்கழகம்), மதிசாஜினி (மாணவி-சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ராமிலன் (மாணவன்- யாழ் இந்துக் கல்லூரி), கிருஸ்ணிகா (மாணவி-யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**பங்களா வீதி,**
**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**தொடர்புகளுக்கு:**
**077 903 3140**
**077 028 3716**
**077 328 8800**
**077 600 2624**

**தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



**திருமதி கந்தசாமி மனிலாதேவி**

கொழும்பை பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி மனிலாதேவி அவர்கள் நேற்று (31.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் நாகலிங்கம், நாகேஸ்வரன் (கனடா), ஈஸ்வரி, கணேசலிங்கம், பாலேஸ்வரன், அருளானந்தம், புலேந்திரன் (சுவிஸ்), சிவனேஸ், காலஞ்சென்ற மயில்வாகனம், ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பூலோகரம்பை, பத்மலோஜினி (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் யசோதா, சிவகெங்கா, காலஞ்சென்ற புஸ்பராணி, மற்றும் சூரியகுமாரி (சுவிஸ்), இரட்சுமணமூர்த்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 291 5383**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடந்தது 3007 நாள்கள்

# நீதி எட்டாக்கனி

## முல்லையில் போராட்டம்



**முல்லைத்தீவு, ஜூன் 1**

**3007 நாள்கள் தொடருகின்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கோரிய போராட்டம், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

'இறுதிப்போரில் வட்டுவாகல் பாலத்தில் இராணுவத்தினிடம் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே?' என்ற தொனிப் பொருளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'எங்கே எங்கே உறவு எங்கே?', 'வட்டுவாகல் பாலத்தில் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே?', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்', 'சர்வதேசமே எமது குரல் உனக்குக் கேட்கவில்லையா?', 'சரணடைந்த எங்களுடைய உறவுகளுக்கு நடந்தது என்ன?' என்ற கோஷங்களை எழுப்பிய வண்ணமும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளின் நிழற்படங்களைத் தாங்கியவாறும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஈடுபட்டனர். (ச-125)

JOIN THE
LOLC WORLD

பரிசோதிப்பு அதிகாரி – விலைமதிப்பீடு

பதவி வெற்றிடங்கள் உள்ள கிளைகள்

கல்னேவ / ஹொரவபத்தான / வெலிகந்த / அரலகன்வில / தெஹிவள II / மொரட்டுவ / வலஸ்முல்ல / கஹட்டகஸ்திகிலிய / திஸ்ஸமஹாராம / சாவகச்சேரி / பாணந்துறை / மாவனெல்ல / நாவலப்பிட்டி / ராஜகிரிய / பிலியந்தலை / யாழ்ப்பாணம் / கண்டி II / தெஹியத்தகண்டிய / முல்லைத்தீவு / ஜா-எல / ஹட்டன் / பிலிமத்தலாவ / பாலாவிய / மொனராகலை / தங்காலை / மொரவக்க / எம்பிலிபிட்டிய II

பதவி நிலை

பொருத்தமான விண்ணப்பதாரி, உள்ளக மற்றும் வெளியக வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை பேணவேண்டியிருப்பதுடன், வாகனத்தின் நிலை, வயது, மாற்றியமைப்புகள், சந்தை நிலைவரம் போன்ற அம்சங்கள் அடங்கலாக, வாகனத்தின் சந்தைப் பெறுமதியை மதிப்பிடுவதற்காக வாகனங்களை பரிசோதிக்கும் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

விண்ணப்பதாரியின் தகைமைகள்

- வாகனங்கள் தொழினுட்பத்தில் NVQ Level 4 தகைமையை கொண்டிருப்பது அல்லது ஏற்றுக் கொள்ளத்தக்க கல்வியகமொன்றில் ஆகக்குறைந்தது வாகனங்கள் தொழினுட்பம் தொடர்பில் 2 வருட சான்றிதழ் நிலை பயிற்சியை பூர்த்தி செய்திருத்தல்.
- க.பொ.த. (சா.த.) பரீட்சையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
- செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் செலுத்தும் / வாகனம் செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருப்பது.
- ஆகக்குறைந்தது ஒரு வருட காலமாவது தொழினுட்ப துறையில் அனுபவத்தைக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.
- காப்புறுதி விலைமதிப்பாய்வாளராக பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருப்பது மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

careers@lolcfinance.com

LOLC

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

தெல்லிப்பழை மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியால பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)



## கசிப்புடன் கைதான இருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்புடன் கைதான இருவருக்கு தலா 5000 ரூபா தண்டப்பணம் விதித்துக் கடுமையாக எச்சரிக்கை செய்து மல்லாகம் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் இரண்டு போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கடந்த வியாழக்கிழமை இரவு மானிப்பாய்ப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோதே இருவருக்கும் தலா 5000 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டதோடு கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ச-125)

# பிள்ளையான் அலுவலகத்தில் தேடுதல்

# தோட்டாக்கள், கைபேசிகள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து 3 கைத்தொலைபேசிகள், ஒரு சாரதி அனுமதிப்பத்திரம், ஐ பாட் ஒன்று, கடவுச்சீட்டு ஒன்று, 9 மில்லிமீற்றர் ரவைத் துப்பாக்கியின் 6 தோட்டாக்கள், ரிப்பிட்டர் ரகத் துப்பாக்கியின் 5 வெற்றுத் தோட்டாக்கள் என்பன சி.ஐ.டி.யினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் கொழும்பிலிருந்து வருகைதந்த குற்றப்புலனாய்வுத் துறையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

குறித்த தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பிரயாணித்தநிலையில் அவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட குற்றச்சாட்டில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** காரிய அனுகூலமானநாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சிதரும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். எதிரிகள்வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் விஷயத்தில் தலையிடவேண்டாம் வியாபாரத்தில் விற்பனை சற்று சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம். வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டியநாள். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்க நேரிடும். முக்கிய முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. அலுவலகத்தில் மற்றவர்களின் விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.



# பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை கையளிப்பு

மன்னார், ஜூன் 1

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை எடுத்துச்செல்லப்பட்டது. கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கென்னடி வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்துச்செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு சிறப்புப்பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு கொடிச்சீலை வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டது. (ச-41)

# மாவாப்பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 1

மாவாப்பாக்குடன் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுத் தகவலுக்கமைவாக மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 15 கிராம் மாவாப்பாக்குப்பையுடன் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கெதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-41-125)





மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் ச.சஸ்மிதன் மாகாணமட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் சித்தியடைந்து தேசியமட்ட ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (ச-25,9)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 1

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன்) கோயில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

5 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5.15 மணிக்கு கர்மாரம்பமும், 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தலும் இடம்பெறவுள்ளது. 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.23 மணி தொடக்கம் 8.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,100)

# மஹோற்சவம்

பருத்தித்துறை, ஜூன் 1

பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்தி விநாயகர் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ வ.வே. தியானந்தராசாக் குருக்கள் தலைமையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய விசுவாச வருட மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும் 11ஆம் திகதி புதன் கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.12ஆம் திகதி வியாழக்கிழமை பூங்கா வனத்திருவிழாவுடன் பூஜைகள் யாவும் நிறைவுறும் என ஆலய தர்மகர்த்தா சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-63)

# கனடா கல்விக் கண்காட்சி! யாழ்ப்பாணத்தில் கோலாகலம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பிரமாண்டமான முறையில் கனடா கல்விக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. கனடா - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா. செல்லத்துரை, சம்மேளனத்தின் இலங்கைக்கான தலைவர் பியந்த சந்திரசேகர மற்றும் பலதரப்பட்ட துறைசார் அதிகாரிகளின் பங்கேற்புடன் கண்காட்சி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. இன்றையதினமும் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இலங்கை வர்த்தகசபை, கனடா உயர்ஸ்தானிகராலயம், கனடா இலங்கை வணிக மன்றம் ஆகியன இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,27,20)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| பகுதிநேர உதவியாளர் | : 0757720604 |
| Medicine Store Assistant | : 0752217661 |
| CCTV Technician | : 0773767899 |
| Printing ,Photoshop Work(Female) | : 0705973429 |
| Chartered Accountant | : 0771298168 |
| Waiter | : 0774078235 |
| Receptionist with Designing Work | : 0776040400 |
| ஓட்டோ மெக்கானிக் | : 0779078839 |
| Market Analyst / inventory Executive. | : 0742142186 |
| Store Keeper | : 0771298168 |
| Sales Assistant | : 0760116634 |
| Customer Care Officer | : 0773501095 |
| தோட்டவேலை | : 0771737667 |
| Management Trainee, Intern(Finance) | : 0783792577 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: **dewmasweb.com**
வேலையாட்கள் தேவையா: **0741383368**
**DEWMAS**, 51, Amman Road, Nallur

**G.C.E.(O/L) தகைமையுடன் லண்டன்(UK) செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு**

**100% உத்தரவாதம்**

- IELTS தேவையில்லை,
- குறைந்த கட்டணத்தில் லண்டன் செல்வதற்கான ஏற்பாடுகளை எமது நிறுவனம் செய்து கொடுக்கிறது.
- 3 நாட்கள் அதாவது மிகக்குறுகிய காலத்தில் Offer Letter- பல்கலைக்கழக அனுமதி பத்திரத்தை பெற்று விசா ஆலோசனையும் வழங்குகிறது.

உங்கள் தகைமையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்....!

**New Zealand, Malaysia, Singapore, Italy, France**
போன்ற நாடுகளுக்கு துரித கதியில் விசிட் விசா மற்றும் உயர்கல்வியை தொடர Study Visaவை பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள். ஆங்கிலம் சாதாரணமாக பேசத்தெரிந்தால் போதுமானது. Payment After Visa

Family & Single Visit Visaவுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**3** வாரங்களில் விசாக்கள்

**0771828215**
**American College of Applied Studies Pvt Ltd**

## கசிப்புடன் ஒருவர் கைது

கோப்பாய்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பகுதியில் 40 லீற்றர் கசிப்புடன் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேடரோந்து நடவடிக்கைகளின்போது இந்தக் கைது இடம்பெற்றது. குறித்த குடும்பஸ்தருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.


(ச-41-125)

**முதியோர், நோயாளர் பராமரிப்புச் சேவை**
யாழ் அரியாலை கண்டிவீதியில் இயங்கும் பராமரிப்பு நிலையத்தில் படுக்கை நோயாளிகள், டிமென்ஸியா, படுக்கைப்புண் சகல வகையான நோயாளிகளையும் விசேட வைத்தியர்களின் கண்காணிப்பில் சேவை வழங்குகின்றோம்.
**077 712 6860, 077 712 6859, 076 252 5725**

**கடை வாடகைக்கு**
மானிப்பாய் வீதி, பள்ளிவாசலுக்கு முன் 20 அடி அகலமும், 35 அடி நீளமும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**077 617 6413**
(CS/58444) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 01 . 1945



மறைவு 29 . 05 . 2025

## அமரர் முருகேசு குலசிங்கம்

**(வரதன் லேனேர்ஸ் உரிமையாளர்)**

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குலசிங்கம் அவர்கள் (29.05.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் முருகேசு கண்ணம்மாவின் பாசமிகு மகனும் யோகேஸ்வரி (தவம், ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர் - கிளிநொச்சி கச்சேரி) அவர்களின் அன்புக் கணவரும், கலைவாணி (லண்டன்), வரதன் (லண்டன்), விஜயராகவன் (சுவிஸ்), சத்தியவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ் (லண்டன்), சேதுகாவலன், (அவுஸ்ரேலியா), நந்தினி (லண்டன்), நிஜிலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனோஜிகா, ஆகாஷ், தர்ஷனா, கபினயா, சகீனா, பிரதீப், காவியா, கம்சியா ஆகியோரின் பேரனும் ஜகிசனின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்புராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கலைப்பூங்கா**
**மீசாலை வடக்கு**
**கொடிகாமம்**
**(வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை முன்வீதி)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 580 6149**

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1940



மறைவு 31 . 05 . 2025

## சுப்பையா தர்மலிங்கம்

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)**

கோயில் குடியிருப்பு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், உப்புக்கேணி வீதி, பெரியமாவடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (31.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, யோகலிங்கம், சிவஞானசுந்தரம், செல்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனா அவர்களின் பாசமிகு கணவரும், தர்சனா, பிரதீபன், சாந்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜசேகரம், விஜயகாந், நித்தியா ஆகியோரின் மாமனாரும், வர்மன், தாமரை, மெலனி, தருணிகா ஆகியோரின் பேரனும், இரவீந்திரன், லீலாவதி, விமலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**உப்புக்கேணி வீதி,**
**பெரியமாவடி, சாவகச்சேரி**

**தகவல் :**
**மகன் பிரதீபன்**

(CS/58445) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna
# Call for Expression of Interest (EOI)

**PRE-QUALIFICATION OF BIDDER FOR PRINT-TO-PROFIT (P2P) MANAGED PRINT SERVICES (MPS)**

**1. Introduction**
The University of Jaffna (hereafter referred to as "the University") invites Expressions of Interest (EOI) from experienced and qualified suppliers to provide Print-to-Profit (P2P) Managed Print Services (MPS). This EOI aims to identify and shortlist potential suppliers capable of delivering cost-efficient, scalable, and high-quality printing solutions tailored to the University's requirements. The selected supplier will implement a Print-to-Profit model where users pay for print services on a per-use basis, ensuring accountability, cost control, and sustainability.

**2. Project Scope**
The University seeks a supplier to manage and support its printing requirements through a Print-toProfit (P2P) model. The scope of the project includes but is not limited to:
- Provision, installation, and maintenance of print devices (e.g., printers, copiers, scanners).
- Implementation of a Print-to-Profit billing system for charging users based on the number of pages printed.
- Monitoring and management of print usage, consumables (e.g., toner, paper), and device health.
- Provision of user support and troubleshooting services.
- Regular reporting on print usage, service performance, and device status.

Estimated Volume of Printing (for information purposes only):
- To support potential suppliers in understanding the scale of the requirement, the University estimates that the annual printing volume may range approximately between 6,000 reams of A4 and 700 reams of A3 paper. This figure is indicative only and provided solely for capacity assessment purposes. Final volume requirements and detailed specifications will be provided at the Request for Proposal (RFP) stage.

**Key Objectives:**
- Optimizing print usage and reducing unnecessary costs.
- Ensuring secure and reliable printing services with minimal downtime.
- Promoting environmental sustainability through waste reduction and energy efficiency.
- Providing accountability through a transparent Print-to-Profit billing structure.

**3. Potential Issues & Preventive Strategies**
The implementation of Print-to-Profit Managed Print Services may face challenges in service management, cost control, technical integration, and user adoption. To address these, the following strategies are expected in the proposal:

3.1 Service Management:
- Service-Level Agreements (SLAs) with guaranteed uptime and maintenance response times.
- Real-time monitoring tools for tracking usage, device health, and performance.
- Regular audits and user feedback mechanisms to ensure service quality.

3.2 Cost Control and Transparent Billing:
- A clear, transparent pricing model with detailed cost breakdowns for color and black-and-white printing.
- Usage monitoring by department or individual users to track and prevent overuse.
- Alerts for exceeding usage limits and controls to avoid unexpected costs.

3.3 Technical Integration and Data Security:
- Seamless integration with the University's IT infrastructure.
- Compliance with data security regulations (e.g., GDPR, HIPAA) and secure printing mechanisms (e.g., PIN codes, user authentication).
- Network readiness for cloud-based print management solutions.

3.4 User Adoption and Training:
- Comprehensive training programs to educate users on the Print-to-Profit model and efficient print practices.
- Continuous support and troubleshooting services to address user concerns.
- Clear usage guidelines to encourage responsible printing behavior.

3.5 Environmental Sustainability:
- Use of energy-efficient devices and eco-friendly consumables.
- Recycling programs for consumables and e-waste.
- Initiatives to reduce paper consumption and promote digital alternatives.

**4. Eligibility Criteria**
Applicants must meet the following qualifications to be considered:
- Proven experience in providing Managed Print Services, especially in a Print-to-Profit model, for large institutions or similar organizations.
- Strong technical capabilities in print fleet management, monitoring, and maintenance.
- Financial stability to support ongoing service requirements.
- Demonstrated compliance with environmental and data security standards.
- Ability to provide a transparent Print-to-Profit billing structure.

**5. Submission Requirements**
Interested parties are invited to submit the following documents:
- Company Profile, including experience in Print-to-Profit MPS and key clients served.
- Technical Proposal detailing services, monitoring solutions, and maintenance plans.
- Pricing Model, including cost per page for color and black-and-white printing and any additional fees.
- Case Studies/References showcasing similar solutions provided to institutions.
- Qualifications of Key Personnel responsible for implementation and support.
- Sustainability Statement detailing eco-friendly practices and initiatives.
- Data Security Statement outlining measures to ensure secure printing and compliance with privacy regulations.
- Any additional supporting documents relevant to the EOI.

**6. Evaluation Criteria**
EOIs will be evaluated based on the following factors:
- Experience and expertise in delivering Print-to-Profit MPS solutions.
- Technical capability and innovation in print management.
- Transparency and cost-effectiveness of the Print-to-Profit pricing model.
- Commitment to environmental sustainability.
- Data security and compliance measures.
- Customer support and training programs.
- References from clients with similar requirements.

**7. Submission Instructions**
The EOIs should be submitted to the Bursar, Finance Branch, University of Jaffna (PO Box-57, Thirunelvely, Jaffna), either by post or in person, to reach his office on or before 2:00 PM on June 24, 2025.

**8. Clarification**
For any queries or clarifications regarding this EOI, interested parties may contact Mr. K. Thirukumaran, Assistant Bursar (Supplies), via email at absp2@univ.jfn.ac.lk or by phone at 021 222 6519.

**9. Confidentiality**
All information provided by applicants in response to this EOI will be treated as confidential and used solely for the purpose of evaluating the Expressions of Interest.

**10. Next Steps**
After evaluating the EOIs, shortlisted applicants will be invited to submit a detailed Request for Proposal (RFP) for Managed Print Services. The University will select the supplier based on the evaluation of the proposals.

**11. Terms and Conditions**
- The University reserves the right to accept or reject any or all EOIs.
- Submission of an EOI does not guarantee that the applicant will be invited to submit a proposal or awarded the contract.
- The University will not be liable for any costs incurred by applicants in the preparation or submission of the EOI or for transport.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Post Box - 57, Thirunelvely, Jaffna.**

**Date: - 01.06.2025**

## வீடு விற்பனைக்கு
சுன்னாகம் கதிரமலை வீதி முருகேச பண்டிதர் வீதி K.K வீதிக்கு அருகாமையில் 2 4/3 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள, 3 படுக்கையறை, 1 குளியலறை, வாகனத்தரிப்பிடத்துடன் சுற்று மதில் கட்டிய Gate போடப்பட்ட வீடு தரமான உறுதிப்பத்திரங்களுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
விலை - 3 கோடி, தரகர் தொடர்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
(CS/57921) J-1
S.P. Karan's:- 077 343 4005

## வீடு வாடகைக்கு உண்டு
மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிறிய குடும்பம் வசிப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு
076 664 4466

## மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
தொடர்புகளுக்கு:
077 334 1281

## வீடு விற்பனைக்கு
யாழ் மல்லாகம் பகுதியில் பயன்தரும் மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
075 777 5693

## மீசாலை கிழக்கில்
காணி விற்பனைக்கு
மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு
தொடர்பு 0776 544 540

## வாடகைக்கு உண்டு
யாழ் நகர் மையப்பகுதியில் 2 பெண்கள் மட்டும் தங்கக்கூடிய அறை சமையல் செய்யலாம், கட்டில், மேசை மற்றும், Fan வசதியும் உண்டு.
தரகர் தேவையில்லை.
(CS/58436) J-1
077 593 5577

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை
தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/56378) J-1

## வெளிநாடு பயணம்
Fly with/without IELTS.
Scholarship up to 40%
PSW/Stay back options for all the countries.
Get a Schengen visa for Europe countries.
Career guidance from Universities.

✓ UK
✓ CANADA
✓ AUSTRALIA
✓ DUBAI
✓ FINLAND
✓ GERMANY
✓ NEW ZEALAND
✓ FRANCE
✓ SPAIN
✓ MALTA

OUR SERVICES
- STUDENT VISA
- VISIT VISA
- BUSINESS VISA
- TOURIST VISA
- EMBASSY FORM FILLING
- JP ATTESTATION
- ADMISSION FOR OVERSEAS UNIVERSITIES

GET MORE DETAILS +94 76 979 0622 +94 76 770 5394

HYBRID VISA CENTRE
No: 6 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06
+94 112 362 925 hybridcampus@gmail.com
hybridcampus.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## அச்சுறுத்தல்களின் அவசியம் என்ன?

இலங்கையில் உள்நாட்டுப்போர் தீவிரமாகியிருந்த காலப்பகுதியில், அதாவது இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், இந்தியாவுக்குத் தப்பிச் சென்று, தனது இறுதிக்காலத்திலாவது தாயக மண்ணில் வாழ்ந்துவிட வேண்டும் என்ற பேரவாவில் நாடு திரும்பிய 75 வயதான முதியவர் ஒருவர் பலாலி விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். அவருக்குப் பிணை வழங்குவதற்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டப்பட்ட நிலையில், அந்த முதியவர் தற்போது விளக்கமறியலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். யானை தன் தலையில் தானே மணல் அள்ளிப்போடுவதைப்போன்றுதான் அநுர அரசாங்கமும் இந்த விடயத்தில் நடந்துள்ளது என்பது மறு விவாதமின்றிய கூற்று.

இந்தியாவிலும், புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கும் ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திரும்புமாறு அரசாங்கம் தொடர்ச்சியாக அழைத்துவருகின்றது. ஆனால், அவர்களுக்கான சட்டப்பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுவிட்டதா? அவர்களுக்கான உத்தரவாதங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனவா? என்று கேட்டால், அதற்கு பலாலி விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள முதியவர்தான் சாட்சியும் பதிலுமாக அமைந்துள்ளார். 'நாடு திரும்பினால் நாங்களும் கைதாகலாம்' என்ற அச்சம் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது வியாபித்துள்ளது. இந்த அச்சம், இலங்கைக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த நூற்றுக்கணக்கானவர்கள் அந்த எண்ணத்தைக் கைவிடுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய ஈழத்தமிழர்கள் இலங்கையில், குறிப்பாக வடக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருப்பார்கள். அத்தகையவர்களுக்கும் ஒரு தவறான செய்தியையே இந்தக் கைதுமூலம் அரசாங்கம் வழங்கியுள்ளது.

'சட்டவிரோதமாகநாட்டைவிட்டு வெளியேறியவர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பும்போது இத்தகைய கைதுகள் வழமையான நடைமுறைதான்' என்ற பொத்தம்பொதுவான கருத்தைத் தெரிவித்துவிட்டு அரசாங்கம் நழுவப்பார்க்கலாம். அந்தக் கருத்துகளில் உண்மை இருக்கவே செய்கின்றது. ஆனால், கடந்தகால நடைமுறைகளை அரசாங்கம் மாற்றியமைத்த பின்னரல்லவா, புலம்பெயர் தமிழர்களை அழைத்திருக்கவேண்டும். அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கிய பின்னரல்லவா அவர்களின் முதலீடுகளைக் கோரியிருக்கவேண்டும். 'நீங்கள் இலங்கைக்குத் திரும்புங்கள், முதலீடுகளைக் கொண்டு வாருங்கள். ஆனால் நாங்கள் கைதுசெய்வோம். பிணை வழங்குவதற்கு எதிர்ப்புக்காட்டுவோம், சிறையில் அடைப்போம்' என்ற மனோநிலையில் இந்த விடயத்தை அணுகுவது என்னமாதிரியான மனோநிலை?


தற்போது அந்த முதியவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு வார்த்தைகளால் சொல்லி மாளாதது. அவருக்கு நேர்ந்த அசம்பாவிதத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள எதிர்ப்பு மிகக் கனதியானது. எனவே, இந்த விடயத்தில் சில சட்டச் சீரமைப்புகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் முனையலாம். ஆனால், பாதிப்புகள் நேர்ந்த பின்னர் பரிகாரத்தைத் தேடுவதை விடவும், பாதிப்புகள் ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதே அரசாங்கத்தின் தலையாய பணி.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

உண்மை என்ற அணியை புனைந்துகொண்டால் அழகு எவ்வளவு பேரழகாகத் தெரிகிறது.

—ஷேக்ஸ்பியர்—



## இலங்கையில் முதலிடுவதற்கு சீன முதலீட்டாளர்கள் ஆர்வம்

கொழும்பு, ஜூன் 1

**சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என இலங்கைக்கு வருகைதந்துள்ள சீன வர்த்தக அமைச்சர், ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு வருகைதந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயற்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர், 100க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

சவாலான காலகட்டத்தில் இருநாடுகளுக்கும் பயனளிக்கும்வகையில், வர்த்தகம் மற்றும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொள்ளும்போது இலங்கைக்குத் தேவையான ஆதரவை வழங்க சீனா அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சீன வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்தார். சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவுசெய்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (ச-இ)



## இறக்குமதி தேங்காய்ப்பால் ஆய்வு

கொழும்பு, ஜூன் 1

இறக்குமதிசெய்யப்பட்ட முதற்தொகுதித் தேங்காய்ப்பால் ஆய்வகப் பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளதாகப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியன இணைந்துபெற்ற அமைச்சரவை அனுமதிக்கமைய, இந்தத் தேங்காய்ப்பால் கையிருப்பு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## துசிதவுக்கு மறியல்!

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை நாளை 2 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2017ஆம்ஆண்டுதொடக்கம் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மின்சாரத் தடைகள் 50,000 முறைப்பாடுகள்

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சுமார் 50,009 மின்சாரத்தடைகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. பதிவாகிய மின்சாரத் தடைகள் தொடர்பான முறைப்பாடுகளில் இதுவரை 14,030 முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார். (ச-இ)



## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, மே மாதத்தில் பணவீக்க வீதம் அதிகரித்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஏப்ரல் மாதத்தில் 2.0 வீதமாகப் பதிவான பணவீக்க வீதம் 0.7 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் ஏப்ரல் மாதத்தில் 1.3 வீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 5.2 வீதமாகப் அதிகரித்துள்ளது. இதே வேளை, ஏப்ரலில் 3.6 வீதமாக பதிவான உணவு அல்லா பணவீக்கம் மே மாதத்தில் 3.3 வீதமாக அதிகரித்துள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 34வது வருடாந்த பொதுக்கூட்டம்

தலைவர்: பேராசிரியர் சி.சிறிசற்குணராசா
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இடம்:யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
(பேராசிரியர் அ.துரைராசா மண்டபம்)

காலம்:08.06.2025 ஞாயிற்றுக்கிழமை, மு.ப.9.30 மணி

**பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
வல்வெட்டித்துறை.

செ.சிவலிங்கராஜா
செயலாளர்.
(077 931 1234)


# இடியன் துவக்குடன் ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதியில் இடியன் துவக்குடன் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்த நபர் கைது செய்யப்பட்டுள் ளார். கைது செய்யப்பட்டவர் 26 வயது டையவர் என்றும், அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை கள் இடம்பெற்று வருகின்றன என் றும் பொலிஸார் மேலும் தெரிவித் துள்ளனர். (ம-125)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

0778649878, 0776343103

## நெற்செய்கை வயல் விற்பனைக்கு

குஞ்சுபரந்தன் சந்தியில் இருந்து 100m தொலைவில், பூநகரி - பரந்தன் பிரதான வீதிக்கு இருமருங்கிலும் அமைந்த 11 ஏக்கர் இருபோக நெற்பயிர்ச் செய்கை வயல் தண்ணீர்ப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.

077 767 7123

20.06.2025 அன்று 60வது அகவை மணிவிழா காணும் ராஜா கிறீம் கவுஸ்
RAJAH
(நல்லூர்=யாழ்ப்பாணம்) உரிமையாளர்
திரு. சின்னராஜா சத்தியசீலன் அவர்களின்
அகவையை முன்னிட்டு
அறிவாற்றல், பாடகர்களுக்கான ஓர் தேடல்
கீழ்ப் பிரிவு
வயது - 5 தொடக்கம் 10 வரை
மத்திய பிரிவு
வயது - 11 தொடக்கம் 15 வரை
மேற்பிரிவு
வயது - 16 தொடக்கம் 20 வரை
இதோ உங்கள் ஆற்றல்களை பேச்சுபோட்டியாகவும், கவிதையாகவும், பாடலாகவும் வெளிக் கொண்டு வரலாம் போட்டியில்
ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 5ம் திகதிக்கு முன்பு நல்லூர் கிளையில் மேற்பார்வையாளரிடம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
போட்டிகள் 08.06.2025, 15.06.2025 இடம் பெறும் போட்டியில் பங்கேற்று உங்கள் திறமைகள்
தேடலில் 1ம் இடம் பெறும் போட்டியாளர்கள் உங்கள் படைப்புகளை 60ஆவது மணிவிழா
அன்று மேடையில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்திக்கொள்ள முடியும்
உங்கள் ஆற்றல் திறமை எங்கள் ராஜா உரிமையாளர் 60ஆவது மணிவிழா நன்நாளில்

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

1. Manager (2 Years Experience)
2. Administration (2 Year Experience)
3. Computet Billing + Cashier
4. Sales Assistant
5. Packing (பொதியிடல்)
6. Part Time - 5.00pm to 10.00pm
7. வயது எல்லை 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :- 077 419 5209
077 419 5218


## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 01 . 1932

மறைவு 30 . 05 . 2025

### செல்லையா மகேஸ்வரி

மாதகல் வில்வளையை பிறப்பிடமாகவும் சங்கானை தொட்டிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரி 30.05.2025 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், தம்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ராமையா, அழகம்மா, இலட்சுமி, சிவபாதசுந்தரம், சிவக்கொழுந்து, மாசிலாமணி, அம்பலவாணர், சேதுப்பிள்ளை மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானேஸ்வரி, செல்வராணி, சற்குணலீலா, விக்கினேஸ்வரன், லலிதா, சற்குணராசா (ராசன்), சுசீலா, சகுந்தலா, நிர்மலா ஆகியோரின் அன்புத்தாயாரும், சிதம்பரநாதன், சந்திரசேகரம், விக்கினேஸ்வரன், சிவலிங்கம், காலஞ்சென்ற ஜெயகாந்தன், இராமலிங்கம், சுபா, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
077 615 5933
077 804 8494

(CS 58434) E-1

தகவல் :
குடும்பத்தினர்


## சுப்பர்மார்கெட் மேலாளர் தேவை

வளர்ந்து வரும் முன்னணி சுப்பர்மார்க்கெட் ஒன்றிற்கு அனுபவமிக்க மற்றும் திறமையான மூத்த மேலாளர் ஒருவர் தேவை

பணியிடம் : சுன்னாகம்
வேலை வகை : முழுநேரம்
ஊதியம் : திறனுக்கு ஏற்ப

### பணிச்செயல்கள்

- பணியாளர்களை வழிநடத்தல் மற்றும் பணியாளர் திறனை மேம்படுத்தல்.
- பொருட்கள் வாங்கல், கையிருப்பு நிர்வாகம் மற்றும் சரக்கு வரத்து கண்காணித்தல்.
- வாடிக்கையாளர் சேவையின் தரத்தை மேம்படுத்தல்.
- தினசரி விற்பனை அறிக்கைகள், செலவு மற்றும்
- வருமானத்தை கண்காணித்தல்
கடையில் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### தகுதி

- குறைந்தது 3 ஆண்டு மேலான்மை அனுபவம் (சுப்பர்மார்க்கெட் / ரீ டெயில் துறையில்)
- சிறந்த நெறிப்படுத்தல் மற்றும் தொடர்புத் திறன்.
Ms Excel, POS இன்வென்ரி மென்பொருள் அனுபவம்.
- வாரஇறுதி மற்றும் பண்டிகை நாட்களிலும் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்.
- வயது 35 தொடக்கம் 60 வயது - ஆண்

மேலதிக தகவலுக்கு : 077 048 4134
சுயவிபரக்கோவையை மேற்படி இலக்கத்திற்கு வட்ஸ்அப் செய்யுங்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/06
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Addition al details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-06-02 To 2025-06-16 during 09:00 hrs and 15:00 hrs
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-06-02 To 2025-06-16 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-06-11 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2025-06-17 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period (Days) |
| NP/14/41(13)/4/Council /03/2025/14 | Package 01 *Construction of Athikari Veethy 2nd lane,Kopay *Reconstruction of Vikneshvara veethy, Puttur East | 7.69 | 84 | C7 or above (Highway) | 3,5000.00 | 77,000.00 | 30.09.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council /03/2025/15 | Package 02 * Reconstruction of Yard front veethy , Urumpirai west *Reconstruction of Semakallai veethy, Urumpirai North | 8.19 | 84 | C7 or above (Highway) | 3,500.00 | 82,000.00 | 30.09.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council /03/2025/16 | Package 03 *Construction of ellalan veethy – Sarashwathy veethy joint veethy,Navakkiri (Balance work) | 6.38 | 84 | C7 or Above (Highway) | 3,500.00 | 64,000.00 | 30.09.2025 | 77 |
| NP/14/41(13)/4/Council /03/2025/17 | Package 04 *Reconstruction of Puthiya Boomi Veethy, Idaikadu. * Reconstruction of Madaththady Veethy, Atchuvely. | 3.99 | 63 | C8 or above (Highway) | 2,500.00 | 40,000.00 | 02.09.2025 | 49 |
| NP/14/41(13)/4/Council /03/2025/18 | Package 05 * Construction of Madaththady veethy , Siruppiddy (Balance work) | 5.34 | 84 | C7 or above (Highway) | 3,500.00 | 54,000.00 | 30.09.2025 | 77 |
| NP/14/41(13)/4/ council/DR/03/2025/19 | Package 06 * Reconstruction of Vallai Cemetry Veethy , Atchuvely | 2.96 | 63 | C8 or Above (Highway) | 2,500.00 | 30,000.00 | 02.09.2025 | 49 |
| NP/14/41(13)/4/Council /Maintenance/03/2025/ 20 | Package 07 (Retarring work) *Reconstruction of Villan Veethy, Arasakesari Pillayar Kovil Veethy, Nallara Kamaddan Veethy, Neervely | 4.33 | 63 | C8 or Above (Highway) | 2,500.00 | 44,000.00 | 02.09.2025 | 49 |
| NP/14/41(13)/4/Council /Maintenance/03/2025/ 21 | Package 08 (Retarring work) *Renovation of Manikkaridaikkadar road, Idaikkadu *Retarring of Kalaimakal Veethy,Siruppiddy eas *Retarring of Ananthapuran veethy &Sellathurai veethy,Irupalai East | 4.35 | 63 | C8 or Above (Highway) | 2,500.00 | 44,000.00 | 02.09.2025 | 49 |
| NP/14/41(13)/4/Council /03/2025/22 | Package 09 *Reconstruction of Kanthankadu cemeter internal road,Kopay | 1.30 | 63 | C9 or above (Highway) | 2,500.00 | 13,000.00 | 02.09.2025 | 49 |

Chairman
Local Authority Procurement Committee
01/06/2025
Valikamam East Pradeshiya Sabha, Puttur.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
S.மோகனரூபி அவர்களின் பாசமிகு மாமியார்

**கோதண்டபாணி அமுதமணி**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




மலர்வு 24.10.1943
உதிர்வு 30.05.2025

பாடசாலைச் சமூகம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
13 • 09 • 1947



மறைவு
20 • 05 • 2018

**அமரர். சின்னத்தம்பி பொன்னம்பலம்**
(மகாலிங்கம்)
(கார் உரிமையாளர் சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம்)
திதி : பூர்வபக்க ஷஷ்டி

ஏழாண்டு கடந்து போனாலும்
ஒரு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை கண்கள் மட்டும்
ஒவ்வொரு நாளும் நீர் சொரிந்து
ஆலமரம் சாய்ந்தாலும் அடிவிழுது
தழைத் தோங்கும் போல்
நீ பிரிந்தாலும் உன்விழுதாய்
நாம் வளர்வோம்
உருவமாய் காத்த நீ அருவமாய்க் காப்பாய் என
ஆண்டவன் கழல் கூட ஏழாண்டு
தவிர்த்து இருந்தோம்.
உந்தன் நிழல் தனில் எப்போதும் நாம்
வளர்வோம் பெரும் துணையாய்.

ஏழாலை மேற்கு (CS/3286) D* தகவல் குடும்பத்தினர்

## நாச்சிமார் அம்மன் கோவில் வெள்ளிக்கிழமை பூஜைக்கான விளம்பரம்

**ஆன்மீக இணக்கத்துடன் கூடிய புனிதமான மாலை வேளையை அனுபவியுங்கள்!**

இலங்கை, காரைநகர், மாப்பாணவூரியில் அமைந்துள்ள நாச்சிமார் அம்மன் கோவில், எங்களது புனிதமான வெள்ளிக்கிழமை பூஜையை தங்கள் இசை மற்றும் ஆன்மீக திறமைகளால் செம்மைப்படுத்த விரும்பும் திறமையான மற்றும் அர்ப்பணிப்புள்ள நபர்களை அன்புடன் அழைக்கிறது.



**எங்களுக்கு தேவையானவை:**

**1. பஜனை ஆசிரியர்**
- நேரம்: மாலை 5:00 மணி முதல் 6:00 மணி வரை
- பக்தர்களை உயர்த்தி, தெய்வத்துடன் இணைக்கும் ஆன்மீகமான பஜனைகளை வழிநடத்துதல்.

**2. நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக் கலைஞர்கள்**
- நேரம்: மாலை 6:00 மணி முதல் 7:30 மணி வரை
- அமைதியான மற்றும் புனிதமான சூழலை உருவாக்க பாரம்பரிய இசையை வாசித்தல்.

**தேவைகள்:**
- தொடர்புடைய திறமைகளில் நிபுணத்துவம்.
- பொறுப்புணர்வு மற்றும் பக்தியுடன் கூடிய அர்ப்பணிப்பு.
- கோவில் சடங்குகளில் முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

**விண்ணப்பிக்கும் முறை:**


கோவில் நிர்வாகத்தை வாட்ஸ்அப் மூலம் +1-626-353-9745 என்ற எண்ணில் அல்லது bmageswaran@icloud.com என்ற மின்னஞ்சல் மூலம் ஜூன். 15. 2025 க்குள் தொடர்பு கொள்ளவும். உங்கள் பெயர், தொடர்பு விவரங்கள் மற்றும் உங்கள் அனுபவத்தின் சுருக்கமான கண்ணோட்டத்தை வழங்கவும்.

**இந்த புனித பாரம்பரியத்தில் எங்களுடன் இணைந்து, உங்கள் திறமைகளை நாச்சிமார் அம்மன் கோவிலில் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கவும்!**

In her service,
Bala Mageswaran
USA
+1-626-353-9745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. காராளர் நவரத்தினம் (விமலாஸ்)**
**திதி: வளர்பிறை சஷ்டி**

**தோற்றம்** 13.12.1946
**மறைவு** 25.05.2023

அப்பா உங்களைப் பற்றி எழுத நினைக்கிறோம், எங்கே தொடங்குவது எப்படி முடிப்பது என்றே தெரியவில்லை.

நீங்கள் அவசரமாகவே விடை பெற்றது போலவே
இப்போதும் நாங்கள் உணர்கிறோம்.

எங்களுக்காகவே, எங்களுக்காக மட்டுமே வாழ்ந்தீர்கள். உங்களுக்காக நீங்கள் எப்போதும் வாழ்வை பயணித்து வாழ்ந்ததை நாம் அறியோம்.

மரணப்படுக்கையிலும் விடைபெறத் தயார் இல்லாது
உங்களுக்கான கடமைகளையே எங்களுடன் பகிர்ந்து கொண்டீர்கள்.

அம்மாவின் இழப்பு எங்களை மட்டுமல்ல, உங்களையும் உங்கள் சுகயீனத்தையும் அதிகளவில் பாதித்தது என்றால் மிகையாகாது.

அம்மா இல்லாத காலத்தை வாழ முடியாமல் அவவுடன் சென்றீர்கள் என்பதே பொருத்தம். எங்களை ஆற்றுவதற்கு யாரும் இல்லாமல் இருக்கிறோம்.

உங்கள் முகப்பல் வரிசை தெரியும் சிரிப்பும்,
செருமல் சத்தமும் எப்போதும் எங்கள் கண்முன்னே...

உலகிலேயே அதிக பாதுகாப்பான இடம் உங்களின் கை அரவணைப்பு என்பதை இப்போது உணர்கிறோம்.

நாங்கள் கேட்டு இல்லை என்று எதையும் நீங்கள் சொன்னது இல்லை.
குறை தெரியாப் பிள்ளைகள் நாங்கள்.

நீங்கள் ஓய்வு என்று வீட்டில் இருந்த நாட்கள்
எங்களுக்கு எப்போதும் அறிந்ததில்லை.

இரண்டு ஆண்டுகள் கடந்து சென்றாலும் உங்களின் நினைவுகளை
எங்களின் நினைவில் இருந்து அழிக்க முடியாது.

எங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும்
மிகப்பெரிய சக்தியைக் கொடுத்தீர்கள்.

உங்கள் சக்தியை மீறி எல்லாப்
பிள்ளைகளையும் சரிசமமாகப் பாவித்தீர்கள்.

எது நடந்தாலும் பார்க்கலாம் என்ற மனநிலையை வளர்த்தது
நீங்கள் தான் - அப்பா

அம்மா இல்லாத நான்கு மாத கால வாழ்க்கையையும்
உறக்கம் இல்லாத கொடிய தனிமையுடன் உடல் உபாதைகளை மறைத்து
கடின உழைப்பை உழைத்தீர்கள்.

உங்களைப் பற்றி எழுத எழுத எவ்வளவோ இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் எங்களை இன்றுவரை ஆண்ட தெய்வம் நீங்கள்தான் - அப்பா.

**இல 38 காளிகோவில் வீதி,**
**சாவகச்சேரி.**

**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

**மண் மகிழ** 12 . 10 . 1944



**மனம் நெகிழ** 30 . 05 . 2020

**அமரர் நடராஜா சுரேந்திரன்**
**(மொழிபெயர்ப்பாளர் - கிளார்கர்)**

அன்பின் திருவுருவே
பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய்
வாழ்ந்து காட்டிய - அப்பா
இன்னும் சில காலம் எங்களோடு
வாழ மறந்ததேன் அப்பா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டுகள் ஐந்து உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது


**47, பழைய யாழ்வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.**
S. புஸ்பராணி - 076 635 2965
விவேகரமணன் - + 3362 403 9679
வித்தியாரமணன் - 4474 9518 6321
K.விஜயகாயத்திரி - + 161 3612 3121

(CS/58418) J-1

**மனைவி, மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 20 - 11 - 1942



**மறைவு** 12 - 06 - 2024

**அமரர்**
**திரு மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் (இ.மா.சி)**
**(ஓய்வுநிலை ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)**

கண் இமைக்கும் நேரத்தில்
கடந்து சென்றது ஒரு வருடம்
அல்லும் பகலும் எமக்கா உழைத்த நீங்கள்
இன்று இல்லை எனும் போது
இதயம் கனக்கின்றது அப்பா!
என்றென்றும் எம் உள்ளத்தில் நீங்கள்
உறைந்திருப்பீர்கள் தெய்வமாய்

**271/6 நாவலர் ஒழுங்கை**
**ஆனைப்பந்தி**
**யாழ்ப்பாணம்**

**பாசத்துடன்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பராமரிப்பாளர் தேவை**

சிறிய வீடுதி ஒன்றிற்கு அறை பராமரிப்பாளர் தேவை. (ஆண், ஒண்)
சம்பளம் - 35,000 /=

தொடர்பு:- 077 993 8348

**காணி விற்பனைக்குண்டு**

இருபாலை சந்திக்கும் இராசபாதை றோட்டுக்கும் இடையில் (அன்னை திரேசா அருகில்) 10. 1 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
076 297 7078

**Personal Classes**
Tamil Medium
**Chemistry**
**Physics**
For 2025, 2026, 2027 Batches

T.P :- 075 062 3675

**காணி விற்பனைக்கு**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு மிக அருகில், அமைதியான சூழலில், நல்ல வீடு கட்ட ஏற்ற 3 பரப்பு காணி விற்பனைக்கு.

தொடர்பு: 076 226 2258

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள இரண்டு கார்கள் (Nissan Moco, Mahindra Kuv100) நிசான் மொகோ, மகேந்திரா கே.யூ.வீ 100. யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
076 693 2227


## மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 05 . 1944

இறப்பு
31 . 05 . 2025

### துரைசாமி நகேஸ்வரி

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி நகேஸ்வரி அவர்கள் கடந்த (31.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், துரைச்சாமியின் பாசமிகு மனைவியும், பாலச்சந்திரன், ஜெகதீஸ்வரி, விமலாதேவி, காலஞ்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாதேவி, நாகநாதன், குமாரசாமி, சசிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புஸ்பராணி, சந்திரவதனா, வீரசிங்கம், சிவசோதி, சிவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், யோகராணி, பத்மினிதேவி, சாந்திகுமார் பாசமிகு மைத்துனியும், சுபப்பிரகாஷ், கஜீபராஜ், பதுஷன், நொசான், நிரோஜன், ஆதித்தியா ஆகியோரின பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்

# கல்லுண்டாயில் புகை; பயணிகள் தொடர் அவதி!

## மாநகரசபை பாராமுகம்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் யாழ். மாநகரசபையின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டுவரும் திண்மக்கழிவு நிலையத்தில் தொடர்ச்சியாக தீ மூட்டப்படுவதனால் வீதியால் பயணம் செய்யும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாக இதுகுறித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த நிலையில் எரியூட்டல் செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டன. எனினும் தற்போதும் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்றன. நீதிமன்றத்தின் தடையுத்தரவை மீறிய இந்தச் செயற்பாடு தொடர்பில் யாழ்.மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே யாழ். மாவட்டத்தின் காற்றின் தரம் குறித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் பரிசோதனைகளை நடத்திய நிலையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இது குறித்து நடவடிக்கை எடுக்குமா? என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

(ச- 125)


**தேவை**

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரைக்கும் ஆலைக்கு பில்கிளாக் பயிலுனர் / அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் ஊழியர்கள்) தேவை.

தொடர்பு :- 076 297 7078

**வீடொன்றிற்கு பெண் உதவியாளர் தேவை**

- வயது - 30 தொடக்கம் 40
- காலை 7.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை
- கிழமையில் 2 நாள் விடுமுறை - வார இறுதியில் சம்பளம் வழங்கப்படும்.
- நல்லூர், அரியாலை, இருபாலை, கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 616 1739

(CS/3297) D*


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 04 . 1940

இறப்பு
28 . 05 . 2025

### விஸ்வப்பிரம்மஸ்ரீ கலா பூசணம்
### ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி (ஆறுமுகம் சிற்பாலயம்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாபூசணம் ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி அவர்கள் கடந்த (28.05.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈழத்து முதன்மை ஸ்தபதி ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னராசா வாலாம்பிகை தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சிந்தாதேவியின் அன்புக் கணவரும், கோகிலவாணி (வட்டுக்கோட்டை), றமேஸ் (கனடா), சதீஸ் (பிரான்ஸ்), ஓவியமாமணி ராயூ (ராயூ ஆட்ஸ் - பிரான்ஸ்), காலஞ்சென்ற தினேஸ் (தீபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன், சுகிதா, பரீனா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கலாசேகரி தம்பித்துரை ஸ்தபதி, நாகரத்தினம் (மணி - லண்டன்). காலஞ்சென்றவரகளான கலாபூசணம் ஜீவரட்ணம் ஸ்தபதி, இராசதுரை (முருகையா), துரைராசா ஸ்தபதி, மகாலிங்கம் (மகான்) மற்றும் கலாபூசணம் சிவலிங்கம் ஸ்தபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவமணிதேவி, வைரமுத்து தவமணிதேவி, இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சாரதா, இராஜேஸ்வரி, செல்வராணி, தங்கமணி மற்றும் சற்குணதேவி, சறோஜினிதேவி, செவ்வேந்திராதேவி, காலஞ்சென்ற சர்வேந்திரராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேனுஜன், ப்ரித்திகா, யாழவன், விகேஸ், கவிநயன், மதுநயன், எழிலிசை, விசாகன், மகிழவன், முகிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

25/9 அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 866 0302

## மரண அறிவித்தல்



தோற்றம்
24 - 10 - 1943

மறைவு
30 - 05 - 2025

### அமுதமணி கோதண்டபாணி

கோப்பாய் மத்தி கட்டுப்பலானையை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி சோனெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட அமுதமணி கோதண்டபாணி அவர்கள் (30.05.2025) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - காமாட்சி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லமுத்து தம்பதியின் அன்பு மருமகளும், சுப்பிரமணியம் கோதண்டபாணி அவர்களின் அன்பு மனைவியும், கிருபாகரன் (பலநோக்கு கூட்டுறவுசங்கம் - வலிகாமம் கிழக்கு தென்பகுதி, நீர்வேலி), நந்தராஜன் (மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), ஸ்ரீசபேசன் (பிரதேச செயலகம் - தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமுதினி, பத்மரஞ்சினி, மோகனரூபி (ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவிநயன், அகிசன், மதுசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, நவரத்தினம், இராசையா, பொன்னையா, கந்தையா, அன்னபூரணம், தில்லைநாதன், இலட்சுமி மற்றும் செல்வமணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கோப்பாய் மத்தி சோனெழு) இடம் பெற்று தகனகிரியைகளுக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு : 077 826 1252 (ஸ்ரீசபேசன்), 077 470 7119 (நந்தன்), 076 805 0843 (கிருபாகரன்).

(CS/3282) D*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பின்னணிகளால் குற்றங்கள் அதிகரிப்பு!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

அரசியல் பின்னணிகள் காரணமாக, இலங்கை இன்று குற்றங்கள் நிறைந்த நாடாகக் காணப்படுகின்றது. இந்த முறையை நான் மாற்றியமைப்பேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஒருபோதும் பதவிகளையும், பட்டங்களையும் எதிர்பார்த்து செயலாற்றவில்லை. மக்களின் துயரங்களை உண்மையாகவே கண்ட மற்றும் அனுபவித்த தலைவர் என்ற வகையில் அனைத்து மக்களுக்காகவும் சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

சட்டத்தின் ஆட்சி உறுதிசெய்யப்பட்ட மற்றும் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக காணப்படும் நாட்டை தற்போது கட்டியெழுப்புகின்றேன். எதிர்கால சந்ததியினரை போதைப் பொருள் பயன்பாட்டிலிருந்து முற்றாக விடுக்கும் பொறுப்பை உறுதியாக நிறைவேற்றி, சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன் இணைந்த குற்ற வலையமைப்புக்களை உடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உயிரைத் துச்சமாகக் கருதி இந்தப் பணிகளை நான் நிறைவேற்றியே தீருவேன் - என்றார். (அ-ம-இ)

# தமிழீழ வைப்பக நகைகளை ராஜபக்சக்களே சூறையாடினர்

## பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 1

தமிழீழ விடுதலை புலிகள் வைத்திருந்த தங்க நகைகளில் அரைவாசியை முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவே கொள்ளையடித்தார் என்று முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் நடத்திய வங்கிகளில் தமிழ் மக்களால் அடகு வைக்கப்பட்ட 220 கிலோ தங்க நகைகள் மீட்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் பல பொலித்தீன் பைகளில் வைக்கப்பட்டிருந்ததோடு அவற்றை அடகு வைத்தவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனையடுத்து, தங்கநகைகள் அனைத்தும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன் பின்னர் அவற்றுக்கு என்ன நடந்தது? என்பது எனக்குத் தெரியாது. அத்துடன், 110 கிலோ தங்க நகைகள் கண்டுபிடிக்கப் பட்டதாக பஸில் ராஜபக்சவும் கூறினார். இதன் பொருள், கிடைத்த தங்க நகைகளில் அரைவாசியை அவர் எடுத்துக் கொண்டார் என்பதாகும்.

நான் இராணுவத்திலிருந்து விலகிய பின்னரும் இதுபோன்ற தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன. ராஜபக்ச குடும்பத்தினர் 6 தொன் தங்க நகைகளை ஜப்பானுக்கு விற்பனை செய்ததாகவும் ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது - என்றார். (ம-இ)

### உறுப்பினர்களின்...

நடைமுறைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலேயே, தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் விவரங்கள் நேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. (அ-ம-26-125)

### பாலியாற்றுக்...

வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற முக்கியமான ஆறாக பாலியாறு காணப்படுகின்றது. 68.4 கிலோமீற்றர் நீளமுள்ள இந்தப் பாலியாறு வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத்தில் ஆரம்பித்து, வடக்கு மற்றும் வடமேற்குத் திசை நோக்கி நகர்ந்து முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கடந்து கடலுக்குள் கலக்கின்றது.

இவ்வாறிருக்கையில், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாற்றை இடைமறித்து 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கமே பாலியாற்றுத் திட்டமாகும். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளும் குடிதண்ணீரைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்வாங்க அடிப்படையில் நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில், பாலியாற்றுத் திட்டத்துக்குத் தேவையான வனப்பகுதியை வழங்கமுடியாது என்று வன உயிரிகள் திணைக்களம் தற்போது அறிவித்துள்ளது.

"பாலியாற்றுத் திட்டத்தின் கீழ் வனப்பகுதி ஊடாகத் தண்ணீரை நகர்த்தும்போது அதன் பாதையில் 860 ஏக்கர் வனப்பகுதியை அழிக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்படும். எனவே, இந்தச் சேதங்களைக் கருத்திற்கொண்டே பாலியாற்றுத் திட்டத்துக்குரிய வனப்பகுதியைத் தரமுடியாது" என்று வன உயிரிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஆனால், "வன உயிரிகள் திணைக்களம் குறிப்பிடுவது போன்று 860 ஏக்கரிலும் அடர்ந்த மரங்கள் இல்லை. 10 வீதமான பகுதி மட்டுமே அடர்ந்த மரங்களாகவும், ஏனையவை தரவைகளாகவுமே காணப்படுகின்றன. எனவே, முறையற்ற காரணங்களை முன்வைத்து, வன உயிரிகள் திணைக்களம் இவ்வாறு முரண்டு பிடிப்பதால், திட்டத்தைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" என்று துறைசார் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம-26)

### இளைஞர்...

கந்தசாமி பிரணவன் (வயது-28) என்ற இளைஞரே இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டவராவார். மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரை இடைமறித்து இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குற்றப் பின்னணி தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-113)

### பாலியாற்றுத்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாலியாற்றுத் திட்டத்துக்கு வன உயிரிகள் திணைக்களம் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து, நகர அபிவிருத்திச் செயலாளர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகளைக் கொண்ட மேன்மட்டக் கலந்துரையாடல் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலின்போது, பாலியாற்றுத் திட்டத்துக்கு வனப்பகுதிகளை வழங்கமுடியாது என்ற விடயத்தை வன உயிரிகள் திணைக்களத்தின் பிரதிநிதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தால் வனத்தின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதையடுத்து, 'பெரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்போது, இவ்வாறான தடைகளையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தமுடியாது' என்று சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இதைத் தொடர்ந்தே, இந்த மாதம் குறித்த பகுதிகளில் மீண்டும் கள ஆய்வுகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### இலங்கையில்...

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலகத் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் நிவாரண நிதியம், கனேடியத் தமிழர் தேசிய அவை மற்றும் டி.வை.ஓ என அறியப்படும் தமிழ் இளைஞர் அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புகள் இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மிலாதே இப்ராஹீம், விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்துபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் ஆகியனவும் இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

### இழப்பீடு...

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக அரசாங்கம் 100 கோடி ரூபா ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி. தர்மதிலக மேலும் தெரிவித்ததாவது:-

பேரிடர் காரணமாக முழுமையாக சேதமடைந்த வீட்டுக்கு 2.5 மில்லியன் ரூபாவும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு சேதத்தின் அளவிற்கேற்பவும் இழப்பீடு வழங்கப்படும். பேரிடர் காரணமாக உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் கடற்படையின் 120 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-இ)

### ஊழல்...

பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சில அரச அதிகாரிகளும் இவ்வாறு வெளியேற முற்படுகின்றனர். எனினும், அத்தகையவர்கள் வெளியேறுவதை தடுப்பதற்கு விமானநிலைய அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அரசாங்கம் உரிய ஆலோசனையை வழங்கியுள்ளது. அத்துடன் புலனாய்வுப் பிரிவினரும் இந்த விடயத்தில் துரித கதியில் செயற்பட்டுவருகின்றனர் என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-44)

### 123 இழுவை...

குற்றத்துக்காகப் பிடிக்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட இழுவைமடிப் படகுகளை, இலங்கையின் கடலெல்லையில் மூழ்கடிக்கும் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கேள்வி எழுப்பினார்.

இதன்போது, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 3 தொடக்கம் 4 வருடங்களாக யாழ். மயிலிட்டித் துறைமுகத்தில் அத்துமீறிய இந்திய இழுவைமடிப் படகுகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. இந்தப் படகுகள் தரித்துநிற்பதால் எமது உள்ளூர் மீனவர்கள் தமது படகுகளை நிறுத்துவதில் பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக குறித்த படகுகளை கடலில் மூழ்கடிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. எனினும், கடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய உபகரணங்களை குறித்த படகுகளிலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் கடலுக்குள் மூழ்கடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படைக்குறைப்புச் செய்வது ஏற்கமுடியாத செயலாம்!

## குமுறுகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 1

நாட்டில் அனைவரும் அமைதிக்காகவே போரில் ஈடுபட்டனர் என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்த கருத்துடன் உடன்படமுடியாது. பிரபாகரன் அமைதிக்காகவா போராடினார்? பாதுகாப்புப் படைகளின் ஆளணியைக் குறைப்பதை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. என்று தெரிவித்துள்ளார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் நிறைவடைந்திருக்காவிட்டால் இந்த நாடு இந்தளவுக்கும் எஞ்சியிருக்காது. நிச்சயம் பிளவு பட்டிருக்கும். ஆயினும் போர் நிறைவடைந்த பின்னரும் நாட்டின் முன்னேற்றப்பயணம் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை. போர் நிறைவடைந்த பின்னர் நாட்டை ஆட்சிசெய்த அனைத்து ஆட்சியாளர்களும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள சில இலங்கைத் தமிழர்கள் தமது விசாவைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, தமது வர்த்தகங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இலங்கையில் மீண்டும் போர் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டுக்கு ஓரளவு அச்சுறுத்தல் காணப்படுகிறது.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உறங்கிக்கொண்டிருந்தால் மீண்டுமொரு பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படலாம்.

வடக்கு மற்றும் கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன என்றால் அதன் ஊடாக எதிர்மறையான பிரதிபலன்களே கிடைக்கும். வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய போர் வீரர் தினத்தில் உரையாற்றியபோது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமைதிக்காகவே அனைவரும் போராடினர் என்று கூறியதை ஏற்கமுடியாது. அமைதிக்காக தலதா மாளிகையின் மீதோ, ஸ்ரீ மகா போதியின் மீதோ தாக்குதல்களை மேற்கொள்ளமுடியாது -என்றார்.

(எ-இ)

## உடனடி வேலைவாய்ப்பு

மல்லாகத்தில் இயங்கிவரும் பிரபல்ய வெதுப்பகம் ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை

- காசாளர் (cashier)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (short eats maker)

ஆண், பெண் இருபாலரும்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 927 1122, 076 552 1122**

## வீடு வாடகைக்குத் தேவை


மாம்பழம் சந்தியில், கடை வைத்திருக்கும்
உரிமையாளர் ஒருவருக்கு மூன்று அல்லது நான்கு
அறைகள் மற்றும் குளியலறை (Attach Bathroom)
உடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- **077 728 4196**

# வருடத்துக்கு 12 கிலோ பிளாஸ்ரிக்கை பயன்படுத்தும் இலங்கையர்கள்!

கொழும்பு, ஜூன் 1

ஓர் இலங்கையர் வருடத்துக்குச் சுமார் 12 கிலோ பிளாஸ்ரிக் பொருள்களைப் பயன்படுத்துகின்றார் என்று சுற்றாடல்துறைப் பிரதி அமைச்சர் என்டன் ஜயகொடி தெரிவித்துள்ளார்.



உலக சுற்றுச்சூழல் தினம் தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி கேகாலை நகரத்தில் தேசிய சுற்றுச்சூழல் தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் "கேகாலை பிரகடனம்" என்ற சுற்றுச்சூழல் அறிக்கையை ஜனாதிபதி வெளியிடுவார்.

வருடத்துக்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் பிளாஸ் ரிக் கழிவு இலங்கையில் உருவாகின்றது. அதில் 10 வீதம் மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது. எஞ்சிய பிளாஸ்ரிக் கழிவுகள் மணல் மேடுகள், கடற்கரை, காட்டுப்பகுதியில் குவிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 01 . 1950

மறைவு 30 . 05 . 2025

### தவயோகநாயகி தனபாலசிங்கம்

கைதடி வடக்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவயோகநாயகி தனபாலசிங்கம் 30.05.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், செந்தில்குமரன் (சுவிஸ்), செந்தில் வண்ணன் (லண்டன்), செந்தில்நிதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நளாயினி (சுவிஸ்), காலஞ்சென்ற மைதிலி (லண்டன்) மற்றும் கார்த்திகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மிலன், சந்தோஷி (சுவிஸ்), கம்சிகா, மதுரிகா, தேன்சிகா, நிகா, மகிழன், கருணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் வசந்தகுணநாயகி, சிவயோகநாதன், சித்திராவாதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூபதிப்பிள்ளை, தர்மராசா, குமுதினி, ரவிக்குமாரன், காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்தினியும் தர்சா, தாரணி, தபோதரன், ரஜீவா, சுஜீவா, துவாரகன் ஆகியோரின் பெரிய தாயாரும் கபிலன், ருக்ஷன், திலீபன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கைதடி வடக்கு,**
**கைதடி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 58440) E-1

## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள
செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும்
கடை ஒன்றிற்கு 18 - 50 வயதுடைய
ஆண் வேலையாட்கள் தேவை
தங்குமிடவசதி செய்து தரப்படும்
மாதச்சம்பளம் - 50000/-
(அடிப்படைச் சம்பளம்)

தொடர்பு: **077 937 0000**
**075 988 1000**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உணவகம்
ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. பரோட்டா தயாரிப்பவர்
2. Delivery Boy
3. சமையல் உதவியாளர்

(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

(CS/58441) J-1

**076 982 7517**

## காணி விற்பனைக்கு உண்டு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார்
கோயில் வீதியில் 3 பரப்பு
காணியுடன் கூடிய வீடு
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு **077 794 8012**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக
B+ இரத்த வகை கொண்ட சிறுநீரகம்
தேவைப்படுகின்றது

உதவ விரும்புவோர் கீழ் காணும்
இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**077 305 8033, 077 853 5625**

## UBER யாழ்ப்பாணத்தில்

உங்களிடம் உள்ள Bike, Tuk,
Car, Van ஆகியவற்றை எம்முடன்
இணைத்து 200,000/= அதிக
வருமானம் பெறலாம்.

No.197 B புங்கன்குளம் வீதி
யாழ்ப்பாணம்

(CS 58442) E-1

தொடர்புகளுக்கு :
**070 755 5755**
**070 500 2051 or 2 or 3**

## தேவை

கயூ விதைகள் நியாயமான விலையில்
கொள்வனவு செய்யப்படும்.



தொடர்புகளுக்கு:
**077 382 0798**


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடவை
கடை ஒன்றிற்கு பெண்
வேலையாட்கள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள்
விரும்பத்தக்கது).

தொடர்பு: **076 632 3554**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைந்துருகல்



மலர்வு
30
09
1985

உதிர்வு
25
05
2023

வைத்தியகலாநிதி
## அமரர் வேலாயுதம் சாரங்கன்

திதி : பூர்வபக்க ஷஷ்டி (01.06.2025)

பதவிகளும் விருதுகளும் காத்திருந்த கணமொன்றில்
காலம் களவாடிப் போன கவிதை நீ!
ஈராண்டுகள் கடுகதிப்பயணமாய்...
இன்று போல் உள்ளது
விடிந்தும் விடியாத புலரியும்
உடல் சிலிர்க்கும் வைகாசிக் காற்றும்
உன் இறுதிப் பயணமும்...

அன்றும் இன்றிருக்கும் அதே பூமி தான்
நீ மட்டும் தான் இல்லை.
இல்லை... உன் உடல் மட்டும் தான் இல்லை...
நீ இருக்கிறாய்...
உடல் தழுவிப் போகும் மென் காற்றிலும்
தொலை தூரக் குயில் கூவலிலும்
பறந்து வரும் பட்டாம் பூச்சியிலும்
அருகில் இருக்கிறாய்...
நீ உன் உடலாக இருந்ததை விட மிக மிக அருகில்...
துன்பத்தில் தலை கோதும் கரங்களாய்
மகனாய், சகோதரனாய், உறவினனாய், நல்ல நண்பனாய்
என்றும் இருப்பாய்!
எங்கள் ஞாபகங்கள் வண்ணமிழந்து போய் விடும் வரை
எம் நினைவுகளில் வாழ்ந்திருப்பாய்!

பரபரப்பின்றி பதற்றமுமின்றி நீ இயங்கியதே இல்லை
அமைதி கொள் !

அணையாப் பெரு விளக்காய்
நித்திய வாழ்வு கொள் !

நம் இதயங்கள் பேசிக் கொள்ளட்டும்
வாழ்க்கை என்னும் வாடகை வீட்டிற்கு
வண்ணம் சேர்த்து முடித்து
உன்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும் வரை
விழி நீருடன்
நீ நேசித்த நாம்...

எமது மகன் வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.06.2025) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில்
(CR/3266) J-1

குடும்பத்தினர்


4 இலட்சம் இலத்திரனியல் அ.அட்டைகள்

# ஜூன் இறுதியில் விநியோகிக்க முடிவு

கொழும்பு, ஜூன் 1

ஜூன் மாத இறுதியில் 4 இலட்சம் இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்த இலத்திரனியல் அடையாள அட்டைகள் கைவிரல் அடையாளம், கண்கள், முக அடையாளம் என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் பிறப்புச்சான்றிதழ் இலக்கம், வரி இலக்கம் என்பவற்றையும் கொண்டிருக்கும்.

அத்துடன் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்கு இந்த இலத்திரனியல் அடையாள அட்டைகள் பெரிதும் உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-33-6)


## காணி விற்பனைக்கு

கச்சேரி East இல் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில், பொளி கல்லுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

077 358 2704

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 216 2622

## காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி ஆடியம்பிட்டி ஒழுங்கையில் கண்டி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் உள்ள 7 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 087 0877

## பெண் வேலையாள் தேவை

தெல்லிப்பளையில் அமைந்துள்ள மூக்குக்கண்ணாடியகத்திற்கு பெண் வேலையாள் தேவை

தொடர்பு:- 076 161 4856

## வேலையாட்கள் தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- காசாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்
- உணவு விநியோகஸ்தர்

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம். கல்வி கற்றுக்கொண்டு வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

(யாழ் மாவட்டத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு : 075 477 0905
whatsapp : 077 314 7580

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன், வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு - 076 739 0413
077 623 4204


# இரு மடங்காகியுள்ள வாழ்க்கைச் செலவு!

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போது வாழ்க்கைச் செலவு இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் சந்திரநாத் அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சம்பளங்களை அதிகரிப்பதால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவோ, பணவீக்கம் குறையவோ மாட்டாது. சம்பள அதிகரிப்பு உற்பத்தியுடன் தொடர்புடையதாக இருக்கவேண்டாம் என்றே பொருளியலாளர்களான நாங்கள் நம்புகின்றோம். ஓரிரு வருடங் களில் பொருளாதாரம் முன்னேற்றமடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-6)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 வைகாசி 18 ஞாயிற்று... சிகரம் :147

வாழ்நாட்கு அலகுஆ வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅது எழுதலால் – வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின்; யாரும்
...ார் நிலமிசை மேல்.

— நாலடியார்



# காணி நிலம் வேண்டும் பராசக்தி

○ நிலாந்தன்

சர்ச்சைக்குரிய அரச வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெற்றிருக்கிறது. தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் திரண்டு நின்று எதிர்ப்பைக் காட்டியதன் விளைவாக அது நடந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிங்கள பௌத்த கடும்போக்குப் பிடிவாதத்தோடு அந்த வர்த்தமானியை நியாயப்படுத்தாமல் அதிலிருந்து பின்வாங்கியிருக்கிறது.

அதேசமயம் இதில் கிடைத்த வெற்றிக்கு உரிமை கோரி அடிபடும் தமிழ்க்கட்சிகள் அதைப்போல ஆழமான அதனோடு தொடர்புடைய ஒரு விடயத்தின் மீதும் கவனம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

தாய்நிலத்தை நிலப்பறிப்பிலிருந்து காப்பாற்றுவது அவசியம். அதேயளவு அவசியமானது, தாய்நிலத்தைச் சனச்செழிப்புடையதாகக் கட்டியெழுப்புவது. ஒருபுறம் உரிமை கோரப்படாத, அல்லது உரிமை கோர ஆட்கள் இல்லாத, அல்லது உரிமை கோரத் தேவையான ஆவணங்கள் இல்லாத காணிகள். இன்னொருபுறம் ஒரு துண்டு காணிகூடச் சொந்தமாக வைத்திருக்காத ஏழைகள்.

ஒருபுறம் பற்றைகள் மண்டிக்கிடக்கும் அல்லது பூதம் காக்கும் பிரமாண்டமான மாளிகைகள். அல்லது சிசிரீவி கமராக்களால் அல்லது செக்யூரிட்டி நிறுவனங்களால் பாதுகாக்கப்படும் பிரமாண்டமான மாளிகைகள். இன்னொருபுறம் ஒரு துண்டுகாணி கூட இல்லாத ஒரு தொகுதி மக்கள்.

தமிழ்மக்கள் நிலப்பறிப்புக்கு எதிராகப் போராடவேண்டும். அதே சமயம் தாய் நிலத்தில் உள்ள ஆளில்லாத வீடுகளையும் காணிகளையும் வீடில்லாதவர்களுக்கும் காணி இல்லாதவர்களுக்கும் பகிர்ந்துகொடுக்க முன்வரவேண்டும். அதை ஒரு தேசக்கடமையாகச் செய்யவேண்டும். தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளை ஒன்றாகச் செய்யவேண்டும்.

அண்மையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஈடுபட்ட பெண் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்றின் போது, யாழ். புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த, ஒரு பெண் செயற்பாட்டாளர் சொன்னார், தன்னுடைய பகுதிக்குள் மட்டும் 24 ஆளில்லாத வீடுகள் உள்ளன என்று. அதுபோல மானிப்பாயில் அந்தோனியார் கோவிலில் நடந்த பொதுமக்கள் சந்திப்பு ஒன்றின்போது அங்கு வந்திருந்த இளவாலை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர் தந்த தகவல்களின்படி, ஒவ்வொரு கிராமத்திலும் சராசரியாக பத்துக்குக் குறையாத ஆளில்லாத வீடுகள் உள்ளன என்று தெரிகிறது.

தமிழர்கள் மத்தியில் ஆளில்லாத வீடுகள் இரண்டு வகைப்படும். முதலாவது வகை, ஆள் இல்லாத அல்லது பாழடைந்த சிதைந்த வீடுகள். இரண்டாவது வகை புலம்பெயர்ந்த தமிழர்கள் கட்டியெழுப்பும் மாடமாளிகைகள். புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களில் காணிகளை வாங்கி அல்லது வீடுகளை வாங்கி அவற்றைப் புனரமைத்துவருகிறார்கள். இந்த வீடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நிரந்தரமாக வசிப்பதில்லை. பருவகாலப் பறவைகளைப்போல அவ்வப்போது வந்துபோகிறார்கள். ஊர்த் திருவிழாக்களுக்கு அல்லது நல்லது கெட்டதுக்கு வந்து போகிறார்கள். அவர்களுடைய அந்தஸ்தின் சின்னமாகிய அந்த வீட்டை ஒன்றில் சிசிரீவி கமராக்கள் கண்காணிக்கும் அல்லது பாதுகாப்பு நிறுவனங்கள் கண்காணிக்கும்.

இவ்வாறாக, தமிழர்தாயகத்தில் இரண்டு வகை ஆளில்லாத வீடுகள் உள்ளன. அதிலும் குறிப்பாக ஆளில்லாத பாழடைந்த வீடுகள் என்று பார்த்தால் தீவுப் பகுதிதான் அவ்வாறான வீடுகளை அதிகமாகக் கொண்டிருக்கிறது. இலங்கைத் தீவிலேயே ஏன் இந்தப் பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகளை அதிகமாகக் கொண்ட கிராமங்களைத் தீவுப்பகுதியிலும் காணமுடியும். இவ்வாறு அளில்லா வீடுகளை அதிகமாகக் கொண்ட ஒரு தேசத்தில், ஆண்டு அனுபவிக்க ஆளில்லாத காணிகளை அரசாங்கம் அபகரிக்க முயற்சிக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்பு பலாலியில் காணிகளை விடுவிக்கும் நிகழ்வொன்றில் பேசிய ஒரு தளபதி, “தமிழ் மக்கள் காணிக்காகப் போராடுகிறார்கள். ஆனால் விடுவிக்கப்பட்ட காணிகளில் வந்து குடியேறுகிறார்கள் இல்லை” என்று பேசியதாக ஒரு சமயப் பிரமுகர் என்னிடம் சொன்னார். முகாமை அண்டிய பகுதிகளில் ஏன் மக்கள் குடியேற மறுக்கிறார்கள் என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முன்பு அவர்கள் இருந்தது ஒரு கிராமம். ஆனால் மீளக்கூடியமர்த்தும்போது அவர்களுக்குக் கையளிக்கப்படுவது பெரும்பாலும் ஒரு வெட்டை. ஒரு பெரிய முகாமின் சிறிய பகுதியாக மாற்றப்பட்டு வெட்டையாக்கப்பட்ட ஓர் இடம். எனவே அங்கே திரும்ப ஒரு கிராமத்தை ஸ்தாபிப்பதற்கு பல ஆண்டுகள் செல்லும். கிராமம் என்பது நிலம் மட்டுமல்ல. கிணறு வேண்டும்; கோயில் வேண்டும்; குளம் வேண்டும்; பாடசாலைகள் அரச அலுவலகங்கள் வேண்டும்; மின்சார, நீர் விநியோகங்கள் வேண்டும்... அதற்குரிய எல்லா உட்கட்டுமானங்களும் கட்டியெழுப்பப்படும் பொழுதுதான் அது ஒரு கிராமமாக மீள எழுச்சி பெறும். எனவே மீள்குடியேற்றம் எனப்படுவது தனிய நிலத்தைக் கையளிப்பது மட்டுமல்ல. அங்கு ஏற்கனவே செழிப்பாக இருந்து பின்னர் சிதைக்கப்பட்ட அழிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை மீளக் கட்டி எழுப்புவது. வெட்டப்பட்ட வேர்களில் இருந்து மீண்டும் ஒரு வன்த்தை உருவாக்குவது போல.

மேலும், மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இடம்பெயர்ந்த மக்களுக்குப் பிறந்த பிள்ளைகள் இப்பொழுது இடம்பெயர்ந்து வாழும் புதிய இடங்களுக்குப் பழக்கப்பட்டு விட்டனர். புதிய தலைமுறையின் தொழில்வாய்ப்புகளும் புதிய இடத்தைச் சுற்றித் தான் இருக்கும். இதனால் பூர்வீக நிலத்துக்குத் திரும்பிச் செல்ல அந்தப் புதிய தலைமுறை தயங்குகிறது. இப்படிப்பட்டதோர் சமூகப் பொருளாதார அரசியல் பின்னணியில், அண்மையில் கிடைத்த சனத்தொகைப் புள்ளிவிபரங்களின்படி, வடபகுதியில் சனத்தொகை வீழ்ச்சி கண்டுள்ளது. தமிழ்மக்கள் மத்தியில் பிள்ளைப்பேறு விகிதம் தாயகத்திலும் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் குறைந்து கொண்டே போகிறது. ஒருபுறம் சனத்தொகை சிறுக்கின்றது. இன்னொருபுறம் நிலமும் சிறுக்கின்றது.

இவைதவிர, இருக்கின்ற நிலத்திலும் ஆளில்லா வீடுகள். எனவே இந்த விடயத்தில் நிலத்தை அபகரிக்க முற்படும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்திடமிருந்து தாய் நிலத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடும் அதேசமயம் தாய்நிலத்தைச் சனப்புழக்கம் உடையதாகக் கட்டியெழுப்புவது பற்றியும் சிந்திக்கவேண்டும். ஆளில்லா வீடுகளை வைத்திருக்கும் உள்நாட்டுத் தமிழர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் தங்களிடமுள்ள மேலதிக காணிகளையும் வீடுகளையும் வீடில்லாதவர்களுக்கும் காணிகள் இல்லாதவர்களுக்கும் தானமாக வழங்கலாம்.

தமது பூர்வீகக்காணியை, பூர்வீக வீட்டைப் பாதுகாக்கவேண்டும் என்ற விருப்பத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடமுடியாது. எல்லாரும் தங்களுடைய பூர்வீக வீட்டையும் காணியையும் தானம் பண்ணவேண்டும் என்று இந்தக் கட்டுரை கேட்கவில்லை. மாறாக தமிழர் தாயகத்தில் பூதம் காக்கும் ஆளில்லாத வீடுகளை வீடில்லாதவர்களுக்கும், பற்றைகள் மண்டிக்கிடக்கும் காணிகளை நிலம் இல்லாதவர்களுக்கும் விரும்பியவர்கள் தானமாக வழங்கலாம். அதை ஓர் அரசியல் செயற்பாட்டு இயக்கமாக முன்னெடுக்கலாம்

இந்திய சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் வினோபா அவ்வாறு பூமிதான இயக்கம் ஒன்றை நடத்தினார். சுதந்திரப் போராளியான அவர் காந்தியின் செல்வாக்குக்கு உள்ளாகி குறிப்பாக ஆந்திராவில் இடம்பெற்ற நிலமற்ற விவசாயிகளின் போராட்டப் பின்னணியில் 1951ஆம் ஆண்டு பூமிதான இயக்கத்தைத் தொடங்கினார். புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த விடயத்தில் முன்னுதாரணமாக இருக்கமுடியும். அதற்கு முன்னுதாரணங்கள் ஏற்கனவே உள்ளன. கிளிநொச்சியில் பன்னங்கண்டிக் கிராமத்தில் சிவாபசுபதி கமத்தில் உள்ள மேட்டுநிலம் அவ்வாறு அங்கே குடியிருக்கும் மலையக மக்களுக்கு கொடையாக வழங்கப்பட்டது. அது ஒரு வித்தியாசமான கதை. 2017 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் உள்ள காவேரி கலாமன்றத்தின் நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக ஒஸ்ரேலியாவில் இருந்து மாலதி வரன் எனப்படும் ஒரு மருத்துவர் வந்திருந்தார். அவர்களோடு இணைந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்ய வேண்டிய ஊடகவியலாளர் ஒருவர் உரிய நேரத்தில் வராமல் பிந்தி வந்திருக்கிறார். ஏன் என்று கேட்டபோது, பன்னங்கண்டிக் கிராமத்தில் நடக்கும் நிலமற்ற மக்களின் போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற காரணத்தால் பிந்திவந்ததாகக் கூறியுள்ளார். உரையாடலின் போக்கில் அந்தக்காணியின் பெயர் சிவாபசுபதி கமம் என்றும் கூறியுள்ளார். சிவா பசுபதி என்ற பெயரைக் கேட்டதும் அவர்களோடு பயணம் செய்த மாலதி வரன், இடையில் குறுக்கிட்டு அது தனது தந்தையாகிய முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதியின் கமம்தான் என்று கூறியுள்ளார். அதனால் அவரை கமத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே போராடும் மக்களோடு கதைக்கவைத்துள்ளார்கள். மக்களோடு கதைத்த மாலதி, வெளிநாடுகளில் வசிக்கும் தனது ஏழு சகோதரர்களோடு கதைத்த பின் அந்தக் கமத்தைப் போராடும் மக்களுக்கே வழங்கத் தான் தயார் என்றும் உறுதி கூறியுள்ளார். உடனடியாகவே கொழும்புக்குச் சென்று தனது சகோதரர்களோடு கதைத்து அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு கிளிநொச்சிக்குத் திரும்பி வந்திருக்கிறார். அந்தக் கமத்தில் நீண்ட காலம் வசித்து வந்த நிலமற்ற மக்களுக்கு அந்தக் கமத்தைச் சேர்ந்த 33 ஏக்கர் மேட்டு நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இது போற்றத்தக்க ஒரு முன்னுதாரணம். நிலம் இல்லாத தன் இனத்தவனுக்கு நிலத்தைக் கொடுப்பது என்பது தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில் ஒன்று. மருத்துவர் மாலதி வரனைப் போல பல புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது காணிகளை, வீடுகளைத் தானமாக வழங்கிவருகிறார்கள்.

காணி உரிமைக்கும் சாதி ஒடுக்குமுறைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் இருந்து ஆராய்ச்சித் தேவைகளுக்காக இலங்கைக்கு வந்த பேராசிரியர் இசபெல்லா எனப்படும் புலமையாளரை சமூக ஏற்றத்தாழ்வுகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு அழைத்துச் சென்றேன். அந்தக்கிரமங்களுக்குச் சென்று ஆராய்ந்தபின் அவர் கேட்டார், “சாதி ஒடுக்குமுறைக்கும் நில உரிமைக்கும் இடையே தொடர்புகள் உண்டல்லவா?” என்று. அது மிக வெளிப்படையான எளிமையான ஒருண்மை.

எனவே நிலமில்லாத மக்களுக்கு தமது நிலத்தை வழங்குவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிலச் சுவாந்தர்கள் முன்வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்கள் முன்வரவேண்டும். அரசியல் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மேற்படி பணியை ஒருங்கிணைக்கலாம். அதை ஒரு செயல்வாதமாகவே ஒழுங்கமைக்கலாம். விரைவில் உருவாக்கப்படவிருக்கும் பிரதேசசபைகள் அதைச் செய்யலாம்.

நிலஅபகரிப்புக்கு எதிராக போராடச் செயற்பாட்டாளர்கள் தேவை. அதுபோலவே நிலத்தைத் தானமாகக் கொடுப்பதற்கும் செயற்பாட்டு இயக்கங்களும் அறக்கொடைகளும் தேவை. தாய் நிலத்தைக் காப்பாற்றுவது என்பது தாய்நிலத்தை அபகரிக்க முற்படும் அரச வர்த்தமானிகளுக்கு எதிராகப் போராடுவது மட்டுமல்ல, அதேயளவு முக்கியத்துவத்துவமுடையது, தாய்நிலத்தை சனச்செழிப்பு மிக்கதாக மாற்றுவது. காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவது; வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்குவது. அதுதான் உண்மையான தேசியக் கூட்டுணர்வு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவேதினி



14 போரின்

கவிதை

தமிழர் பூமி கொதித்துக்கொண்டிருந்தது.
எங்கும் மரண ஓலங்கள்...
ஆயுதம் தூக்கவேண்டிய கட்டாயம் அனைவரிடமும்,
அகப்பட்டால் அல்லது பிடித்துவிட்டால்....
உயிர்போகும் வலியைவிட.....
கொடூர வேதனையை அனுபவிக்கநேரிடலாம்.
'தப்பித்து ஓடு' என்பது ஒரே வாசகம்,
பெண்கள் தாலிகளை கட்டாயத்தின் பேரில்,
கயிறுகளாக்கிக் கட்டிக்கொண்டார்கள்......
மஞ்சள் தாலிகளில் 'நஞ்சுக்குப்பிகள்'
'திருமணம் வன்முறைக்கு பாதுகாப்பு'
என்று முட்டாள்தனமாகச் சிந்தித்தார்கள்.....
நிவேதினியும் அவர்களில் ஒருத்தியாக நின்றாள்
வருவதைப் பார்த்துவிடுவோம் என்னும் தைரியம்.
அப்போது அவளுக்கு பதினான்கு வயது!
சிறுபிள்ளை, தாய் சோறு ஊட்டுகிற குழந்தை..
எதிர்காலம் தெரியாமல் கைகளில்
ஆயுதத்தோடு எழுகிறது...
சிறுமிகளின் கைகளில் ஆயுதம்....
இந்தப் பிஞ்சுகளை போரிட வைப்பது என்ன நியாயம்?
காலத்தின் கட்டாயம் என்றாலும்...
மனச்சாட்சியைத் தொலைத்து...சிறுமிகளின் கைகளில்
கொல்வதற்கான ஆயுதம்....
தன் நாளைய வாழ்வின்மீது...வெற்றியின்மீது
அவளுக்குப் பெருநம்பிக்கை...
உலகம் அவளைக் கொண்டாடுமென்று ..
இறுமாப்போடு நின்றாள்....தன் இனம் போற்றும்
என்னும் பெருநம்பிக்கை.... பேராசை...
அது...அசுர நம்பிக்கை ஆணவத்தின் உச்சம்...
அச்சமில்லா சிறுவயது...எடுப்பார் கைப்பிள்ளை...
'அகப்பட்டுவிடாதே .....அம்மா அழுகிறாள்....
வேறுவழியில்லை இதுதான் விதியென்று
புறப்பட்டாயிற்று முடிந்தவரை...ஓடுவோம்..
காதுகளின் கடைசிவரை...நோய்கொடுக்கும்
சத்தங்கள்...கத்தல்கள்... அவல ஓலங்கள்...
வெடித்துவிழும்...பிரமாண்ட பீரங்கிகள்....
நொடிக்கொருதரம்...கொட்டப்படும்..
கொடூர வெடிபொருள்கள்
மழையெனப்பொழியும்
வானக்குண்டுகள்....
திரும்பும் இடமெல்லாம் தீப்பிழம்புகள்!
நிவேதினியின் கண்களைத் தோட்டாக்கள்
துளைக்கின்றன...
கால்களில் ஒன்று... துண்டாகின்றது..
வயிற்றில் பாயும்..வெடி குண்டுகள்...
அவள் நினைவுகள் அவளிடமில்லை....
இறந்ததாக ... எடுத்துப்போடுகிறார்கள்...
இதயம் துடிக்கிறது....இளமையின் தைரியமும்
இறுமாப்பும்...அன்னையின் தாய்ப்பாலும்...
உயிரைத் தக்கவைக்கின்றன...
மூடையாக அள்ளி ஏற்றுகிறார்கள்..
அம்மா கத்துகிறாள்...
உயிரிருந்தும் வாழமுடியாத உடல் என்கிறது,
அந்த நொடிக்கான அவலம்.
எல்லாம் மாறியது...ஆட்சியும் கைமாறுகிறது.....
இறந்தவையெல்லம் எரிந்தன.....
உயிர் இருந்தவை எல்லாம் மீண்டும் பிறந்தன....
எத்தனை நாட்கள் கட்டில் படுக்கையில்.....
ஒரு சிறுமியின் பாதிவாழ்வு பறிபோயிற்று.
மீதிக்காலங்களில் என்ன செய்வாள்?...
சிந்திக்க மட்டும்தான் இயலுமாக இருந்தது!
கண்கள் மூடிக்கிடந்தன..
திறந்தபோது ஏதும் தெரியவில்லை..
போர் அவள் கண்களைத் தின்றுவிட்டது..
எப்படி வாழ்வது?..அழுது ஓய்ந்தாயிற்று..
போரின் சத்தமும்... போர் செய்தோர் வீரமும்
அவள் உடலெங்கும் குண்டுகளைக் கொட்டித் தீர்த்தன...
விசாரணைகள் முடிந்தன...புனர்வாழ்வு கொடுத்தனர்...
எதிரிக்குக்கூட இரக்கம் பிறந்தது....
கண்கள் கொண்டவரே வாழமுடியாத இப்புவியில்
மூடிய கண்களைக்கொண்டு என்ன செய்வது...
இது மாபெரும் தண்டனையென போகவிட்டார்கள்.
தாய்க்குப் பாரமாக..மீண்டும் குழந்தையாகி
தாயின் கைகளில் தாங்கும் அவலம்..
வாழமுடியவில்லை..வலி அழுத்தியது.
சாவதற்கான அனுமதி காலம் தரவில்லை.
குண்டுகளின் சத்தமும்..துப்பாக்கியின் வடிவமும்..
மீண்டும் மீண்டும்..கனவில் வருகிறது..
அன்று ராஜகுமாரிகளாக நின்று..
எல்லாவற்றையும் தலைமைதாங்கி வழிநடத்தி...
கனவு முடிந்ததும்...அடிமைகளாகிய வரலாறுகள் போல...
போர் முடிந்ததும்.....உக்கிரம் தணிந்ததும்,
ஒரு பிச்சைக்காரியாக தெருவில் நின்றாள்...
எப்படி வாழ்வது?.சிந்தித்தாள்.....
பாசறை கற்பித்த இசையின் திறமையை
கையில் எடுத்தாள்....மூடிய கண்களை வைத்து
காலத்தை வென்றாள்.....
மீண்டும் பாடகியாகப் பிறந்தாள்....
பாடப்பாட சோகங்கள் தொலைந்தன.
மௌனங்கள் வெடித்து மழையெனப் பொழிந்தன..
இசைக்கருவிகளை .. மீட்டத் தொடங்கினாள்.
காலம் அவளை மெல்ல மேலே கொண்டுபோனது.
மேடையெங்கும் கைதட்டல்கள்...
ரசிகர்கள் கூட்டம் அலை மோதியது.
ஆயுதம் எடுத்த கை...இசை மீட்டியது..
கைதட்டியே ரசிகர் களைத்தனர்....
புகழ் பரவப் பரவ ...சாதிக்கத் தோன்றியது...
கற்கத் தொடங்கினாள்....
கல்வி அவளைச் சிறப்பித்தது...
கண்ணில்லையென வன்முறை செய்தவர்...
பாடகியாக...கரம் கூப்பி நின்றனர்...
தன்னைப் போன்ற பெண்களுக்கெல்லாம்..
தலைவியாய்..இசையின் தாயாய் ...
வாழ்ந்துவருகிறாள்...நிவேதினி
பசிக்கு உணவும், வாழ்வதற்கான வீடுமாய்...
அவளுக்கான வசதிகளைக் காலம்
அமைத்துக்கொடுத்தது...போர் தின்ற மிச்சங்களாய்..
வடுக்களோடும் வருத்தங்களோடும் வாழும்
அன்றைய சிறுமிகள்...இன்றைய பெண்களாய்..
உதவிகளை நம்பியும்...பாதுகாப்பைத் தேடியும்...
வன்முறைகளுக்கு ஆட்பட்டும்..
மிகுதி வாழ்வு வெறுமையாகப்போகிறது.
அவளோடு நின்ற பலரெங்கே?
அவர்கள் முகங்களை தேடுகிறது மனம்...
கூலிக்கு வேலைசெய்த...தாயின் வறுமை நீக்காமல்
போராடப் போய் அவளைத் தவிக்கவிட்டு...மீண்டும்..
அவள் தயவில் வாழும் பிறவியாய்...
எதைச் சாதித்தாள் நிவேதினி? எதை வென்றாள்?
கண்களும் கால்களும் தொலைந்தன....
வருத்தங்களைச் சொத்தாக...நோய்களை வாழ்வாக
சேமித்துக்கொடுத்திருக்கும்..கொடியபோர்!
பொருளாதாரம்..கடித்துத் துப்புகிறது....
கால் வயிற்றுக்கு...பல தூரம் ஓடுகிறாள்...
பல பாடல் பாடினால்..ஒரு வேளை சோறு!
வந்ததைக் கொண்டு..தந்ததை உண்டு....
மிகுதித் தூரங்களை...விருப்பமின்றிக் கடக்கும்
நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வு.....
ஆண்டுகள் கடந்தும்...அழியாத நினைவுகள்
மாறாதென நினைத்த ...பெரிய மாற்றங்கள்.
மரணங்களின் விளிம்புவரை சென்று மீண்டாயிற்று..
ஒரு தேசத்தைக் கட்டிக்காக்க இறைவிகளாக
நின்றவர்கள்...இன்று வெறும் கருங்கற்களாக...
தூசு படிந்த விக்கிரகங்காளாக.....
பார மூடைகளாக.......
அடுத்தவர்... தயவுதேடும் தோழிகளாக...
தவிப்போடும்..வெறுப்போடும்..
தாங்கும் தோள்களின் காலங்கள் முடிந்தால்...
யாரை வைத்து இவள் தன் கால்களால்.. நடப்பாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ஆனந்தி



# மண் வாசனையோடு மாட்டுவண்டிப் பயணம்

சண்சியா வரதராசன்
*இரண்டாம் வருட கற்கை,*
*ஊடகக்கற்கைகள் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

பசுமை பரப்பிய புல்வெளிகள், தென்றல் வீசும் பசுந்திரைகள், மண்வாசனை கமழும் வீதிகள் இவற்றின் வழியாக மாட்டுவண்டியில் செய்த ஓர் பயணம், மனதிலே என்றும் மறையாத நினைவுச்சுழலாக இருக்கும். நவீன வசதிகளின் வேகமயமான கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய சந்ததிக்கு மாட்டுவண்டியின் மகத்துவம் தெரியவாபோகிறது?

வண்டியின் இரும்புச்சக்கரங்கள் மண்வழியே உருண்டு செல்லும் ஒலி, கண்களைத் தொடும் மண் தூசிகள், சட்டெனத் தழுவும் மெல்லியகாற்று, இவையோடு இணைந்து இயற்கை அழகை இரசித்தபடி ஒரு பயணத்தை இனி எங்கு அனுபவிக்க முடியும்? இன்றைய நவீன வாழ்க்கை முறைக்கு மாட்டு வண்டியில் பயணம் செய்வது என்பது சரிப்பட்டு வருமா? என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இன்று ஆங்காங்கே நடக்கும் வீதி விபத்துகளைப் பார்த்தால் மாட்டுவண்டியின் மகத்துவம் என்ன என்பதை புரிந்துகொள்வீர்கள்.

நாம் அன்றாடம் தொலைத்துக் கொண்டிருப்பது நம் பாரம்பரியத்தை மட்டுமல்ல, நம்மையும் தான். இயற்கைக்கு ஒவ்வாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு பசுமை வயல்களுக்கு நடுவே "கரக் கரக்" என்ற சத்தத்தோடு இயற்கையோடு இணைந்து பயணித்த பயணத்தைப் பற்றி வெறும் வார்த்தைகளால் சொன்னால் புரிந்துவிடாது.

மாட்டுவண்டி என்பது மறைந்துபோக வேண்டிய காட்சி அல்ல. அது நம் அடையாளத்தோடு பின்னிப் பிணைந்த ஓர் சாட்சி மரபாகும். இதன் மகத்துவம் என்பது அடுத்த சந்ததிக்கு கையளிக்கப்படவேண்டும். நம் முன்னோர்கள் சுமந்து வந்த பசுமைப் பாதையை நாமும் மறந்துவிடாமல் புதிய தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் அவர்கள் அதை அனுபவிக்க வழிகாட்டுவதும் எமது தலையாய கடமையாகும். ■

எம்.முபாறக்



# முதல் வாழ்த்து

மே 14 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் பிறந்தநாள்.விடிந்தும் விடியாமலும் ஒலிக்கிறது அவரது கையடக்கத் தொலைபேசி.

ஆன்ஸர் பட்டனைத் தட்டினால்....

" ஹலோ டலஸ் ... !!!

"மனம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.நீண்ட ஆயுளுக்கு வாழ்த்துகிறேன்.."

டலஸ் எதிர்பார்த்திருந்த அழைப்புதான்.மிகவும் சந்தோசம் அவருக்கு...

ஏனென்றால், சுமார் 30 வருடங்களாக அவரது பிறந்தநாளுக்கு காலையில் வரும் முதல் தொலைபேசி அழைப்பு இது. இந்த வருடமும் தவறவில்லை.

அது யாருடைய அழைப்பு தெரியுமா...வேறுயாருமல்லர் அப்படி அழைத்தவர் மஹிந்த ராஜபக்சதான். இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

கோத்தாவின் அரசில் இருந்து எல்லா அமைச்சர்களும் விலகியபோது டலஸ் அழகப்பெருமவும் விலகினார். விலகியது மட்டுமல்ல....நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தலில் ரணிலை எதிர்த்து டலஸு ம் போட்டியிட்டார்.

ஆனால், மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட அவரது கட்சி ரணிலைத்தான் ஆதரித்தது வெல்லவைத்தது. இதனால் மஹிந்தவுக்கும் டலஸுக்கும் இடையில் சிறு மனக்கசப்பு. அதையும் தாண்டி அவரது பிறந்த நாளுக்கு வழமைபோல் முதல் ஆளாக வாழ்த்துச் சொன்னமை டலஸ் அழகபெருமவை நெகிழவைத்திருக்கிறதாம், இந்த நெகிழ்ச்சியோடு மீண்டும் பிரிந்தவர்கள் கூடவும் கூடுமோ?

## அறிந்தும் அறியாமலும்

# எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு அதிர்ஷ்டம்

முன்னாள் அமைச்சர்களாக இருந்த தற்போதைய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் திசைகாட்டி அரசை நாடாளுமன்றில் கடுமையாகத் தாக்கி வருகிறார்கள். அதற்குக் காரணம் என்ன தெரியுமா...?

திசைகாட்டியின் ஊடாக புதியவர்கள் வந்து அமைச்சர்களாக இருப்பது தானாம். தாம் அலங்கரித்த ஆசனங்களை புதியவர்கள் வந்து அலங்கரிப்பதை பார்த்து வயிறு எரிந்து மனநிலை பாதிக்கப்பட்டே இவ்வாறு நடந்துகொள்கிறார்களாம். இதனால் இந்த எம்.பி.க்களை ஓரளவாவது சந்தோசப்படுத்துவதற்காக 'மீண்டும் அரசை நோக்கி..'என்றொரு வேலைத்திட்டத்தைத் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளாராம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க. அதன் அடிப்படையில்,நாடாளுமன்ற அமர்வுகள் முடிந்த பின் இந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அரச தரப்பு ஆசனங்களில் அமைச்சர்கள் அமர்ந்திருக்கும் ஆசனங்களில் அமர்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமாம். இதன் மூலம் ஓரளவாவது அவர்களைச் சந்தோஷப்படுத்தமுடியும். பாதிக்கப்பட்டுள்ள மனோநிலையை சீர்செய்ய முடியும் என்று பிமல் ரத்நாயக்க நம்புகிறார். இதுபற்றி சபாநாயகரிடம் அவர் கதைக்கப்போகிறாராம்.





# சலூட் அடிக்க விருப்பமில்லை

16ஆவது போர் வெற்றிவிழாவில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரை அதிகமான இராணுவத்தினரின் மனதைப் புண்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.


அப்படி என்னதான் பேசினார் அநுர?

இராணுவத்தை "இராணுவ வீரர்கள்" என்று அழைக்கவில்லை.எல்லா இராணுவத்தினரையும் " சிப்பாய்கள் " என்றே அழைத்தார்.

அதுதான் பிரச்சினை.

இதை அதிகமான இராணுவத்தினரால் ஏற்கமுடியவில்லை. விமல் வீரவன்ஸவை தொடர்புகொண்ட ஓர் இராணுவ அதிகாரி இதுபற்றி மிகவும் கவலையாகப் பேசினாராம்.

"ஜனாதிபதியைப் பார்த்து சலூட் அடிக்கவும் மனசு வரவில்லை சேர்..." என்று கவலையுடன் அவர் சொன்னாராம். அநுர இன்னும் பழையதை மறக்கவில்லை. அதனால்தான் இராணுவத்தின் மேலிருந்த வன்மத்தை இப்படிக் காட்டியுள்ளார் என்றும் ஒரு கதை அடிபடுகின்றது.



# யாழ். மாணவர்களை காப்பாற்றிய எம்.பி.



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் எம்.பி. ஆசு மாரசிங்க கொழும்புப் பல்கலைகழகத்தில் படிக்கும் காலத்தில் அவர் மாணவத்தலைவராக இருந்தவர்.

அவரைத் தலைவராக்கியது யாழ்.தமிழ் மாணவர்கள்தானாம்.

அந்த நன்றிக்கடனை மறக்காமல் அந்தக் காலப்பகுதியில் அந்த தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தாராம்.அதில் ஒன்றுதான் போர்க்காலத்தில் அவர்கள் எதிர்நோக்கிய சம்பவங்கள்.புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் வெள்ளவத்தைப் பொலிஸார் திடீர் திடீரென அந்த மாணவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுவிடுவார்களாம்.ஆசுதான் பின்னால் ஓடிச்சென்று அந்த மாணவர்களை மீட்டுவருவாராம்.

அவர்கள் புலிகள் இல்லை என்று சொல்லி காப்பாற்றுவதற்காக வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்துக்குத் தினமும் நடப்பாராம். அந்தப் புண்ணியம் தனக்கு இத்தனை வெற்றிகளை அரசியலில் பெற்றுத் தந்தது என இப்போதும் சொல்கிறாராம் அவர்.

# அநுர வேறு அரசியல் வேறு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தயாசிறி ஜயசேகரவும் நல்ல நண்பர்கள்.

அநுர ஜனாதிபதியான பிறகும் அந்த நட்புத் தொடர்கிறது. இப்போதுகூட தயாசிறி எப்போது தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் உடனே பதிலளிப்பாராம் ஜனாதிபதி. அதற்காக அவருடன் 'டீல்' எல்லாம் கிடையாதாம். நாடாளுமன்றில் அரசை கடுமையாகத் தாக்குபவர்களுள் தயாசிறியும் ஒருவர். 'ஜனாதிபதி நண்பர்தான். அநுரவின் நட்பு வேறு, அரசியல் வேறு' என்கிறார் தயாசிறி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# 175 ஆவது ஆண்டில் பாஷையூர் பதியமர்ந்த பதுவையின் நாயகன்

கொ.றொஷ்வின்
பாஷையூர்

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மாந்தை பிரசித்தி பெற்ற இறங்குதுறையாக விளங்கியதால் கொழும்பு செல்லும் பயணிகளின் சிறிய துறைமுகமாக கொழும்புத்துறை முன்னைய காலங்களில் விளங்கியது. கொழும்பு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கு பாஷையூர் காரணமாக விளங்கியதால் பாசூர் என்ற பெயர் ஏற்பட்டதாக மக்கள் மத்தியில் ஒரு கதை உண்டு. மேலும் யாழ்பாடி என்னும் ஒருவன் பரராசசிங்கன் அரசசபையில் தனது திறமையை வெளிப்படுத்தியதால் அரசன் கொடுத்த மணல்மேடுதான் தற்போது பாஷையூர் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. எனினும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் பாஷையூரில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பது பற்றி 1775ஆம் ஆண்டு "ஆயர் இல்ல"

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருந்த போர்த்துக்கேயர் செபவழிபாடுகளை நடத்த ஒரு சிறு குடிலை அப்போது பாஷையூரில் அமைத்தனர் என்றும் அப்போது அங்கே ஓர் அந்தோனியார் திருச்சொரூபம் எழுந்தருளியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. சங்கிலிய மன்னன் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயரின் வழிப்பாட்டிடங்கள் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி பல வேதகலாபனைகள் நடந்தேறின. மன்னனின் செயற்பாட்டினால் அந்தோனியாரின் வழிபாட்டிடம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இந்தச் செயலினால் ஏற்பட்ட அச்சம் காரணமாக மக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறினர். 1814 இல் இந்தியாவில் கோவா மாநிலத்திலிருந்து ஒறிற்றோரியன் சபையினைச் சேர்ந்த அருட்திரு யோக்கிம் கபிரியேல் என்னும் குருவானவரின் முயற்சியால் முருகக் கல்லிலான ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் அமைப்பாக இருமருங்கிலும் பாலை மரங்களிலாலான தூண்கள் அமைக்கப்பட்டு அவற்றின் முகப்பாரம் தாங்குவதற்கும் அமைப்பு செய்யப்பட்டது.

அதன்பின்னர் வந்த குருவானவரான விக்டர் டெலாண்டெஸின் முயற்சியால் 106 அடிநீளமும் 38 அடி அகலம் கொண்ட ஆலயம் 20 ஆயிரம் ரூபா செலவில் 13.10.1911 அன்று உரோமை கலைநுட்பங்களுக்கு அமைய குருவானவரின் முயற்சியினால் அமையப்பெற்றது. அவருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அவர் இறந்த பின்பும் அவரது உடல், ஆலயத்தின் மேற்குப் பக்கமாக உள்ள கோவில் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அக்குருவானவரின் நினைவாக பாஷையூர் கடற்கரை வீதியில் அவருக்கு உருவச்சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

1935ஆம் ஆண்டு அப்போது பங்குத்தந்தையாகவும் பின்னர் ஆயராகவும் இருந்த மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் முயற்சியினால் இரண்டு கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. ஆலயத்தின் நடுவே காணப்படும் சிங்காசனமானது வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்து என்னும் சிற்பக்கலைஞரால் வடிமைக்கப்பட்டது. இன்று காணப்படும் சிங்காரத் தேரும் 1950 ஆம் ஆண்டு அவராலே செதுக்கப்பட்டது. ஆசந்தி, அந்தோனியார் மற்றும் செபஸ்தியார் எழுந்தருளியிருக்கும் இருப்பிடமும் அவராலே செய்யப்பட்டன.

சிம்மாசனத்தின் நடுவே காணப்படும் அந்தோனியாரின் உயர்ந்த திருச்சொரூபம் உரோமிலிருந்து எடுத்துவரப்பட்டு ஆலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டது. இங்கே காணப்படும் சிலுவைப்பாதைப் படங்கள் அனைத்தும் 1918 ஆம் ஆண்டளவில் பெல்ஜியம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். இவ்வாறு சரித்திர காலமாக விளங்கும் இவ்வாலயத்தின் 175 ஆவது ஆண்டுப் பெருவிழாவை எதிர்வரும் 13 ஆம் திகதி காண்பது அந்தோனியாரின் பக்தர்களுக்கு கிடைத்த மாபெரும் மகிழ்ச்சியே. அத்துடன் கொச்சிக்கடை புனித அந்தோனியரார் ஆலயத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு இத்தாலியிலிருந்து எடுத்துவரப்பட்ட அந்தோனியாரின் திருப்பண்டம் இந்த ஆலயத்திற்கும் கொண்டுவரப்பட்டமை ஒரு வரப்பிரசாதமாகும். அந்தத் திருப்பண்டத்தின் ஒரு சிறிய பகுதி இற்றைவரை ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் ஆலயத்தின் கூரைகள் சேதமடைந்தும் அந்தோனியாரின் இருப்பிடங்கள் சேதமாக்கப்பட்டும் அற்புதமாக அவரின் திருச்சொருபம் எதுவித சேதமும் ஏற்படாமல் அப்படியே காணப்பட்டதுடன், சிங்காரத்தேருக்கும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை. இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பலியின் பின்னர் 5.45 மணிக்கு திருச்செபமாலையுடன் கொடியேற்றப்பட்டு அருகில் இருக்கும் குழந்தை இயேசு கெபியில் வழிபாடுகள் இடம்பெறும்.

2 ஆம் திகதி, சென். அன்ரனீஸ் வீதி சந்தியிலுள்ள வரவேற்பு அந்தோனியார் கெபியில் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் இடம்பெறும். 3ஆம் திகதி, கடல் நடுவே எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியாரின் கெபியில் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் இடம்பெறும். 4ஆம் திகதி, வழமைபோன்று ஆலயத்தின் மாடத்தில் நவநாள் திருப்பலிகள் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். ஆனி 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாவும், மறுநாள் 13 ஆம் திகதி பெருவிழா திருப்பலியின் முதல் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும், 175 ஆவது ஆண்டு பெருவிழா சிறப்புத் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில் 6.30 மணிக்கும் இடம்பெறும். தொடர்ந்து மாலை புனிதரின் தேர்ப்பவனி கிராமங்களின் வீதிகள் ஊடாக வலம்வந்து இறுதியாக ஆசீருடன் பெருவிழா நிறைவுபெறும்.

# இப்படிக்கு ஆண்டாள்

கலைவாணன் துஷிந்தன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

விழி இரண்டும் வேர்க்கும் வரை இமைக்காமல் உனை இரசிப்பேன்
உன் விழி சற்றே எனைநோக்க வெட்கத்தில் தலை குனிவேன்
இரட்டை உதிரம் கொண்டாலும் உன் ஒற்றை உருவம் கண்டறிவேன்
கண்டுகொண்ட நொடிப்பொழுதே என் கண்களை உன்னோடு அனுப்பிவைப்பேன்

நான் செல்லும் கோவிலுக்குள் உன் விரல் மீட்டிய சித்திரம் கண்டேன்
சித்திரமும் பேசுமென்று உன் ஓவியத்தில் உணர்ந்துகொண்டேன்
கார்மேக கண்ணன் ராதை தனை இடப்பக்கம் வைத்ததுபோல
இந்த ஆண்டாளவளை உன் காலடியில் வைக்க மறந்தாயோ

வேட்டி கட்டி வந்தவனை உயிர் வேதம் மறந்து பார்த்தாலும்
வேண்டாம் என்று மனம் சொல்ல அதை ஒருபோதும் கேட்டதில்லை
உள்ளம் உணரும் உண்மையதை மதியும் இங்கு மறந்திடவே
மன்னன் உன்னைக் காணும்வரை மங்கை உன்னில் காதல்கொள்வேன்

உன் விழியோடு என் விழி மோதுகின்ற ஒவ்வொரு நொடிப்பொழுதும்
மண்துகளைப் பறக்கச் செய்யும் தண்டவாளமும் முட்டிக்கொள்ளும்
ஒற்றை மனதுகொள்ளும் காதல் உலகக் குறிப்பின் உச்சமென்று
மனதைக் கொய்த கள்வன் உன்னை உணரும்போது புரிந்துகொண்டேன்

உன் செவியிட்ட என் இதழ் மெல்ல எப்போதும் அசைந்ததில்லை
ஆனாலும் அவா கொண்டேன் உன் இதழ் எந்தன் செவி நனைக்க
நடந்து செல்லும் பாதையிலும் உந்தன் காலடியை எதிர்பார்த்தேன்
காணாமல் நானும் இங்கே தனித்துச் செல்ல பழகிக்கொண்டேன்

கண்ணனை காதல் செய்ய ஆண்டாளுக்கு இசைவு தேவையில்லை
மனதுக்குள் அன்பிருக்க மற்றவர் திருப்பித்தர நான் வேண்டுவதில்லை
மறுத்தாலும் மறைத்தாலும் மறக்காது காத்துநிற்பேன்
மாறுகின்ற உலகத்தில் உன் மாற்றம் என்னை வந்துசேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழியில் பேசாப் பெண்ணியம்

பவித் அருள்வசந்த்
இரண்டாம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

காலகாலமாக பெண்களை அவதூறாகப் பேசுவதற்கு நாம் சில பழமொழிகளைக் கையாண்டுவந்துள்ளோம். ஆனால் அந்தப் பழமொழிகளின் உண்மை அர்த்தம் குறித்து ஆழமாக ஆய்வொன்றை மேற்கொண்டால் அந்தப்பழமொழிகளின் உண்மைக் கருத்து வேறொன்றாக அமைகிறது.


பெண்கள் எடுக்கும் முடிவுகள் தவறாகும் பொழுதோ, பெண்களின் செயல் தடைப்படும் பொழுதோ, அதிகளவான ஆண்களால் "பெண் புத்தி பின் புத்தி" எனும் பழமொழி கூறப்படும். ஆனால் இதன் உண்மைப் பொருளானது பெண்கள் எந்த முடிவை எடுத்தாலும் அதன் பிற்பட்ட விளைவுகளை எண்ணிப் பார்த்து அதற்கேற்ற வகையில் எடுப்பார்கள். இதனால் பாதகமான பிரச்சினைகள் ஏற்படுவது குறைவடையும் என்பதாகும். ஆனால் இந்தப் பழமொழிகளை தமக்கேற்ற அர்த்தத்தைக் கொண்டு அதிகளவானோர் மாற்றிப் பயன்படுத்துகிறார்கள்.

"அரசனை நம்பி புருஷனை கைவிட்டாள்" என பெண்களைப் பார்த்து இழிவாகப் பேசும் ஒரு வழக்காறு இன்றும் நம்மிடம் காணப்படுகிறது. ஆனால் இதன் உண்மைப் பொருள் பிள்ளைப் பாக்கியம் இல்லாத பெண்கள் அரசமரத்தைச் சுற்றிவந்து தொட்டில் கட்டினால் பிள்ளை பிறக்கும் எனும் ஐதீகம் காணப்படுகிறது. இவ்வாறு அரச மரத்தை நம்பி அதுவே கதி என இருந்தால் எப்படி பிள்ளை பிறக்கும். நம்பவேண்டியது புருஷனை அல்லவா? என்பதே பழமொழியின் உண்மைப் பொருள்.

இது மட்டுமல்லாமல் பெண்களின் சீதனப் பிரச்சினையைக்கொண்டுகூட பழமொழிகள் தோற்றம் பெற்றுள்ளன. ஒரே பழமொழியில் பெண்களை சொத்தைச் சுருட்டுபவர்களாகவும், ஆண்களை சொத்தைக் குவிப்பவர்களாவும் "சொத்தச் சுருட்ட ஒருத்தியும் சொத்தைக் குவிக்க ஒருத்தனும்" எனும் பழமொழி கூறுகிறது. அந்தக் காலத்தில் வேலையில்லாத பெண்களை மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் சீதனம் வேண்டி திருமணம் செய்வதனால் இப்பழமொழி பயன்பாட்டில் இருந்துள்ளது. ஆனால் இன்று இது முற்றாக தேவையற்ற ஒரு பழமொழியாகவே காணப்படுகிறது. காரணம் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உழைப்பவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் இன்றும் சீதனப் பிரச்சினைகள் எங்கேயும் ஓர் இடத்தில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

மேலும் "தாயை சந்தையில பார்த்தால் பிள்ளையை வீட்டை பார்க்கத் தேவையில்லை" எனும் பழமொழி மூலமாக ஒரு பிள்ளையின் வளர்ப்பில் தாயின் பங்களிப்பையே முதன்மைப்படுத்தியுள்ளது. ஆனால் தந்தையின் வளர்ப்புப் பற்றி எந்த ஒரு பழமொழியும் குறிப்பிடப்படவில்லை. பிள்ளை வளர்ப்பில் தாய், தந்தை இருவரினது பங்களிப்பும் இன்றியமையாதவை.


இதேபோல பல பழமொழிகள் பெண்ணியத்தின் சமநிலையை சமூகத்தில் பேசத் தவறியனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக "அஞ்சு வயசு ஆண் பிள்ளைக்கு ஐம்பது வயதுப் பெண் கால் முடக்கவேண்டும்" என்பது ஆண் என்றாலே பெண்கள் வயது வேறுபாடு இன்றி பணியவேண்டும் என்பதையும், "அடக்கமே பெண்ணுக்கு அழகு" என்பதன் ஊடாக பெண்களை அடக்கமாக இருக்குமாறு சமூகம் கட்டளையிடுவதாகவும் "ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா?" என்பதன் ஊடாக ஊசியாக பெண்களையும், நூல்களாக ஆண்களையும் கொண்டு பெண்களின் ஈடுபாடு இல்லாமல் ஆண்கள் எவ்வாறு அவர்களைப் பயன்படுத்துவார்கள் என்றவாறான பொருள் ஒன்று வெளிக்காட்டப்படுகிறது. சில பழமொழிகள் பெண்ணியத்தை ஆதரித்தாலும் பெரும்பாலான பழமொழிகள் பெண்ணியத்துக்கு எதிரானவையாகவே காட்டப்படுகின்றன. ஆணாதிக்க சமூகத்தில் இந்தப் பழமொழிகளின் உண்மைப்பொருள் திரிபடைந்துவிட்டதோ? எனும் சந்தேகமும் இன்று எழுகிறது. இத்தகைய பழமொழி குறித்து ஆழமான ஆய்வொன்றை நிகழ்த்தி இதன் உண்மைப் பொருள்களை அறிய வேண்டிய கடப்பாடு நம்மிடம் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்



பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

“மனநலத்தின் ஆகும் மறுமை” என்கிறார். மனத்தினால் ஏற்படுகின்ற விளைவுகளின் வாயிலாக ஏற் படுகின்ற நன்மையின்பால் மறுமை இன்பம் உண்டாகும் எனப்பொருள் அமைகிறது. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்கின்ற புலவர் இயற்றிய “அழல் புரிந்த அடர் தாமரை” என்று தொடங்கும் 29ஆவது புறநானூற்றுப் பாடலில் நாடாளும் வேந்தன்கூட நல்லது செய்கின்றபோது நன்மையும், தீயவை செய்கின்றபோது தீமையினையும் அனுபவித்துக் கொள்ளவேண்டும் என்கிறார். இத்தகைய நியதியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுடன் சேருதல் தவிர்க்கப்பட வேண்டும்.

இங்கு கௌதமர் போதித்த கர்மாவின் பிரதிபலிப்புக் காணப்படுகிறது. இரட்டைச்செய்யுளில் ஐந்தாவது போதனையில் பகைவர்களினை வீழ்த்துவதற்கு வயிரம் என்பது கருவியாக அமையாது. “வயிரம்” என்பது செற்றம் (சினம்) வெறுப்பு, குரோதம் (கோபம்) முதலிய சொற்களால் அழைக்கப்படுகின்றது. மாறாக பகையினை வெற்றிகொள்வதற்கு அன்பும் அறமும் அகிம்சையும்தான் சரியான கருவிகளாக இருக்கமுடியும். அருச்சுனன் பகவான் கிருஸ்ணரிடம் கேட்கின்றனன் “எது ஜீவனைப் பாவத்திலே பிடித்துத் தள்ளுகிறது” என்று. அதற்கு காமம், குரோதம் போன்ற ரஜோ குணங்கள்தான் என்று பகவான் கிருஸ்ணர் குறிப்பிடுகிறார். இதனைத் திருவள்ளுவர் பொறை உடைமையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றும் துணையும் புகழ் (திரு: 156)*

தமக்குத் தீங்கினை அல்லது துன்பங்களினை ஏற்படுத்துகின்றவர்களினைப் பொறுத்துக்கொள்ளாது அவர்களைத் தண்டித்துக்கொள்ளுகின்ற அத்தருணத்தில் தண்டிக்கப்படுவதனை எண்ணி இன்புறுவதற்கு மாறாக அவர்களினை மன்னிக்கின்றபோது மன்னித்தவரின் புகழ் பார் போற்ற நீடித்துநிலைத்துநிற்கும் தாராண்மியம் உடையது. பகைமையினை வெற்றிகொள்ள மன்னிக்கும் மனமே அடிப்படையானது. இந்துசமயம் இதனை வீடுபேறு அல்லது முத்திக்கு இணையானது என்கின்றது. மனிதன் பற்றுகளிலிருந்து விடுதலை பெற்று அருட்பேற்றுக்கு ஆளாவதே முத்தியடைதல் என்பர். இறைவன்மீது கொண்ட எல்லையற்ற காதலே முத்திக்கு அடிப்படையான காரணமாகின்றது. இராமலிங்க சுவாமிகளின் கருத்துப்படி சித்திக்கு முத்தி கருவியாகும். திருமூலர் தூய இறையன்பிலே நம்பிக்கைவைத்து இறைவனை வேண்டுபவர்களே பேரின்பத்தினைப் பெறமுடியும் என்கின்றார்.

*முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்*
*தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி*
*மெய்த்தவம் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்*
*பத்தியில் உற்றோர் பரானந்த போதரே (திருமந்திரம் : 2633)*

### 1.3.1 வாழ்க்கை முறை

பகவான் புத்தர், மனிதனின் மனம்தான் மனிதனை இயக்குகின்றது என்றும், வாழ்கின்றபோது மனிதர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், அறிவு நிறைந்தவர்களாகவும், தவ ஆற்றலில் சிறந்தவர்களாகவும், புத்திசாலித்தனம் நிறைந்தவர்களாகவும் விளங்கவேண்டுமாயின் அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளுகின்ற உறவுகளின் தொடர்புகள் சிறப்பானதாக இருக்கவேண்டும் என்கிறார். அதாவது இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டதுபோல் ஒழுக்கம், தவம், அறிவு ஆகியவற்றில் சிறந்தவர்களுடன் அல்லது தன்னைக்காட்டிலும் அப் பண்புகளினால் மேலானவர்களுடன் தொடர்பினை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறானவர்களுடன் தொடர்புகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அமையாவிடின் தனித்திருத்தல் சிறந்ததாகும் எனவும் நட்பினை, உறவினை வளர்த்துக்கொள்வதற்கு சிறந்த நபர்கள் இல்லையே என எண்ணி மூடர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தக்கூடாது என்ற கருத்தினை தம்மபத்தின் ஐந்தாவது அத்தியாயமான பேதை (மூடர்) என்னும் பகுதியில் “சரம்சே நாதிகச்சேய்ய வேய்யம் ஸதிஸமத்தநோ” எனத் தொடங்கும் சுலோகத்தில் தெளிவுபடுத்துகின்றார். இச்சுலோகத்தில் பயத்தினை அடிப்படையாகக் கொண்டு “ஸம்ஸார ஸஞ்சாரத்தை” விளக்கப்பட்டுள்ளது. மேலும் நல்ல வேதங்கள், ஆகமங்கள், நூல்களினைக் கற்றறிந்து அதன்வழி வாழ்கின்ற சான்றோரைத் தேடிக்கொள்ளவேண்டும் என்ற கருத்து நாலடியாரின் “நுண்ணுர்வினாரோடு கூடி நுகர்வடைமை” என ஆரம்பிக்கும் 61ஆவது பாடலிலும் காணக்கூடியதாகவுள்ளது. இப்பாடலில் நுண்ணிய அறிவுடையவர்களுடன் அதாவது பல நூல்களினைக் கற்று அறிவியல் ரீதியான தெளிவுடையவர்களுடன் மற்றும் மதிநுட்பமும் கற்றல் அறிவும் நிறைந்தவர்களுடன் பழகுதலானது பூவுலகத்திலும்மேலும் விண்ணுலகத்திலும் கிடைக்கக்கூடிய இன்பத்தினை நுகர்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றுத்தருகிறது எனச் சித்தரிக்கப்படுகிறது.

நல்ல பல நூல்களினைக் கற்காதவர்களுடன் அதாவது அறிவு இல்லாதவர்களுடனான உறவு அல்லது நட்பு பூலோகத்தில் நரகவேதனையினை அனுபவிப்பது போன்றது. இங்கு பேதை அல்லது மூடர் என்று தம்மபதத்தில் பாளி மொழியில் பாவக்கோ எனக் குறிப்பிடப்பட்ட பதத்துக்கு தமிழ் மொழிபெயர்ப்பில் ராமஸ்சுவாமி மற்றும் ராதிகா போன்றோர் பேதை என்ற தமிழ்ப் பதத்தினை பயன்படுத்துகின்றனர். அதேவேளை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டில் மூடர் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. தமிழில் பேதை என்ற சொல்லிற்கு பல அர்த்தங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக சிறுமி, முட்டாள், சூதுவாது அற்றவன், பெண், தரித்திரன் என்பவற்றினைக் குறிப்பிடலாம். இங்கு பேதை என்பது அறிவு அற்ற வர்க்கத்தினைக் குறிக்கும். கௌதம புத்தரின்வழி நோக்கின் அறிவற்றவன் என்பவன் வாழ்வின் நிதர்சனங்களினை அறிந்துகொள்ளாதவன். வாழ்கையில் எல்லாவற்றினையும் தனது குறுகிய புலத்துக்குள் பூர்த்திசெய்துகொள்ள விரும்புபவனும் ஆவான். அதாவது என் செல்வம், என் பிள்ளை என்கின்ற குறுகிய வட்டத்துக்குள் சிந்திப்பவர்களாவர். இத்தகையோர் தானே தனக்குச் சொந்தம் இல்லை என்பதனை உணர்ந்துகொள்ளாதவர்களாக இருப்பர்.

எவன் ஒருவன் தன்னை அறிந்துகொள்ளுகின்றானோ அவன் அறிவுள்ளவனாவான். அறிவுள்ளவர்களுடன் சேர்ந்து பயணிக்கின்ற மூடர்கள் யாவரும் அறிவாளர்கள் ஆகிவிடமுடியாது. எவனொருவன் அறநெறியினைப் புரிந்துகொள்ளுகின்றானோ அப்பொழுதுதான் அவன் அறிவாற்றல் உள்ளவனாக உருவாகுவதற்கான சாத்தியப்பாடு தோன்றுகின்றது. அறத்தினைப் புரிதல் என்பது வாழ்வியலின் பக்குவப்பட்ட நிலையினைக் குறிக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக விவேக சிந்தாமணியில் வருகின்ற பின்வரும் பாடல்வரிகள் அமையப்பெற்றுள்ளன.

(தொடரும்)

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

குப்பிழான் ஐ.சண்முகனிடமிருந்து நான் குண்டுக் கட்டாகக் கட்டிக் கொண்டுவந்த திசை இதழ்களை வாசிச்சுமுடிக்கேக்குள்ளதான் அந்த ஊரடங்கும் தொடங்கிச்சுது. (ஊரடங்குச் சட்டத்திற்கு இங்கிலீசில 'கேர்பியூ ஓடர்' எண்டது எல்லாருக்கும் தெரியும். ஆனால் சிலர் கேவிஓடர் kv order எண்டும் சொல்லுறவை. அதுகும் ஒருவகையில சரிதான். ஏனெண்டால் கண்டவுடனை வெடிவைக்கிற ஓடர் எண்டதால அதுவும் பொருந்தும்) அப்ப எனக்கு வாசிக்கிறதுக்கு ஒண்டுமில்லை எண்டதாலதான் ஊரடங்கு தளர்த்திற நேரத்தில குலசிங்கம் வீட்டை ஆத்துப்பறந்து போவன்.

நான் முன்னமே ஊர்ப்புதினத்தில 'க்ரியா'ராமகிருஷ்ணனுக்கும் குலசிங்கத்துக்குமிடையிலயிருந்த நெருக்கமான சிநேகிதத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறன். அவர் தன்ரை 'க்ரியா' பதிப்பகத்தால வெளியிடுகிற புத்தகங்களையெல்லாம் பதிவுத்தபாலில் குலசிங்கத்துக்கு அனுப்பிவைப்பார். நான் அந்த ஊரடங்கு மூட்டம் குலசிங்கம் வீட்டைபோய், 'எனக்கு வாசிக்கிறதுக்குக் கொஞ்சப் புத்தகங்கள் தாங்கோ!' எண்டு கேட்டவுடனை அந்தத் தடவை பதிவுத்தபாலில் வந்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்து 'இந்தாடாப்பா இதைக்கொண்டுபோ! நான்கூட இன்னும் வாசிக்கேல்ல' எண்டு சொல்லி ஒரு புத்தகத்தை என்னட்டத் தந்தார். அது 'கோவேறுகழுதை', 'ஆறுமுகம்' எனுமிரு புதினங்களை எழுதி ஏற்கனவே நவீனத் தமிழ் இலக்கிய உலகின் கவனத்தையீர்த்த இமையம் எழுதிய மூன்றாவது புதினமான செடல்'. எனக்கது புதையல் கிடைச்சதுமாதிரி இருந்திச்சுது. இப்படி அந்த மூட்டம் நான் அவரிட்டயிருந்து கனக்கப் புத்தகங்களை எடுத்துவந்து வாசிச்சிருக்கிறன். அதிலை விஷ்ணுபுரம், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் இரண்டும் முக்கியமான புத்தகங்கள்.

31

நான் குலசிங்கம் வீட்டிற்கு முதன்முதலாகப் போகேக்குள்ள அவரின்ரை வீட்டிலயிருக்கிற லைபிறரியப் பாத்துப் பிரமிச்சுப்போனன். அங்கையிருக்கிற சில புத்தகங்களும் சஞ்சிகைகளும் பொதுநூலகங்களிலை இருக்குமோ தெரியாது. நான் அந்த லைபிறரிக்குள்ள போய் முதல்ல எடுத்தது விஷ்ணுபுரமும் குழந்தைகள் பெண்கள் ஆண்களும் தான். அதிலையும் ஸ்பெஷல் என்னெண்டால் குழந்தைகள் பெண்கள் ஆண்கள் புத்தகத்தைத் திறந்ததும் முதற் பக்கத்தில, “அன்புடன் நண்பர் குலசிங்கத்துக்கு சுந்தர ராமசாமி” எண்டு கறுத்த மைப்பேனையால எழுதியிருந்தது. அப்பதான் எனக்கு குலசிங்கம், சுந்தரராமசாமியோட வலுநெருக்கம் எண்டது தெரியவந்தது. சுந்தரராமசாமிக்கு குலசிங்கம் ஒரு குடும்ப நண்பராக இருந்திருக்கிறார். எண்பதுகளில் குலசிங்கம் தமிழகத்திற்கு இலக்கியப் பயணமொன்றினை மேற்கொண்டிருந்தார். அப்போதுதான் அவருக்கு சுந்தரராமசாமியுடன் நெருக்கம் ஏற்பட்டது. அது காலப்போக்கில் நெருக்கமான நட்பாக மாறியது. 1990களில் வெளிவந்த காலச்சுவடு இதழொன்றில் குலசிங்கத்தின் நேர்காணலும் வெளிவந்திருந்ததை நான் வாசிச்சிருக்கிறன்.

நான் வாசிக்கத் தொடங்கிய 1990களில் லக்ஷ்மிதான் எனது அபிமான எழுத்தாளராக இருந்தார். லக்ஷ்மியின் நாவல்களை நான் வாங்கிக் குவித்த காலகட்டமது. பின்னர் ராஜேஷ்குமாருக்கு மாறினேன். இடைக்கிடையே ராஜேந்திரகுமாரையும் வாசிப்பதுண்டு.

பின்னர் பாலகுமாரனுக்கு மாறினேன். அடுத்து சுஜாதாவுக்குத் தாவினேன். சுஜாதா ஒரு நேர்காணலில் தனக்குப் பிடித்த எழுத்தாளர்கள் என இருவரைக் குறிப்பிட்டிருந்தார். ஒருவர் குளச்சல் ஜோர்ஜ். மற்றவர் சுந்தரராமசாமி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை



# பேருந்தில் நீ எனக்கு ஜன்னலோரம்

ரிஸ்வானா ரபீக்
தமிழ் சிறப்புக் கற்கைகள் துறை
கலை கலாசாரப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

பேருந்தின் ஜன்னலோர இருக்கை. அது வெறும் இடமல்ல பல பேருக்கு ஒரு விடுதலை சாசனம். நகரத்தின் நெரிசலில் இருந்து தப்பி, இயற்கையின் அழகை ரசிக்கவும், சிந்தனைகளில் தன்னைத் தொலைக்கவும் கிடைக்கும் ஒரு தனிமையான சொர்க்கம் அது. அவளுக்கு அந்த ஜன்னலோர இருக்கை ஒரு வரம்.

அந்தப் பேருந்து நிலையத்தின் இரைச்சலில் அவள் தனித்திருந்தாள். கையில் வைத்திருந்த புத்தகத்தைக்கூட படிக்க மனம் ஒப்பவில்லை. தான் எப்போது ஊருக்குப் போகும் பேருந்து வரும் என்று அவள் கண்கள் அலைபாய்ந்தன. அவள் துன்பத்தை உடையாக உடுத்திக்கொண்ட இளம்பெண். சோகமே உருவாக ஊசலாடும் அவள் முகத்தில், இவற்றுக்கிடையில் அவளை அறியாமலேயே இதழோரம் சிறு புன்னகை, காரணம் அரைமணி நேர ஜன்னலோர இருக்கை.

அன்றையதினம் அலுவலகம் முடித்து பேருந்துக்காகக் காத்துக்கொண்டிருந்தாள் அவள். வழக்கமான நேரத்தைவிட பேருந்து சற்று தாமதமாக வந்ததால் பயணிகள் கூட்டம் அலைமோதியது. எப்படியோ ஒருவழியாகப் பேருந்தில் ஏறிக்கொண்டவளுக்கு அன்றையதினம் ஜன்னலோர இருக்கை வாய்க்கவில்லை. நின்றுகொண்டிருந்த அவள் "இந்த ஜன்னலோர இருக்கையைக்கூட எனக்கு கடவுள் தர விரும்பவில்லை போலும் . ஹ்ம்ம்ம்.... நான் ஒரு அரைமணி நேரமாவது மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்க அந்தக் கடவுளுக்கு விருப்பமில்லைப் போல" என எண்ணிக்கொண்டாள்.

உடனே "எக்ஸ்கியூஸ் மீ மேடம் , வில் யு சிட் இன் திஸ் சீட்? " என்றது ஒரு குரல். அது அவளுக்கு மிகவும் பரிச்சயமான குரல். உடனே திரும்பிப்பார்த்தாள். ஆம் அது பரிச்சயமான குரல் மட்டுமல்ல மிகவும் பரிச்சயமான ஒருவரும்தான். ஒரு கணம் தன் கல்லூரிக் காலத்திற்கே அவள் சென்றுவிட்டாள்.

அவன் அவளுடன் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவன். படித்தவன் மட்டுமல்ல ஒருதலையாக மூன்று வருடங்கள் அவளைக் காதலித்தவன் அவன் தான்.........

அவனுக்கும் அதே ஜன்னலோர இருக்கை என்றால் கொள்ளைப் பிரியம். எனவே அவனது ஜன்னலோர இன்பத்தைக் கெடுத்துவிட்டு அவ் இன்பத்தை அனுபவிக்கத் தயங்கிய அவள் "இல்லை இன்னும் கொஞ்சத்தூரம்தானே பரவாயில்லை" என்று சொல்லி முடிக்கும் முன்பே அவன் இருக்கையில் இருந்து எழுந்துவிட்டான். அவளும் அமர்ந்துகொண்டாள். எப்பொழுதும் போல அவளால் இயற்கைக் காட்சிகளையும், அழகையும் ரசிக்கமுடியவில்லை. அவனுடன் தொடர்ந்து பேசலாமா, வேண்டாமா என்ற குழப்பம் எழுந்துகொண்டே இருந்ததனால் அவளுக்கு அந்த ஜன்னல் ஓர இருக்கைகூட எப்பொழுதும் போல சுவாரஷ்யமானதாக இருக்கவில்லை.

சற்றுநேரம் கழித்து பக்கத்து இருக்கையில் இருந்தவர் எழுந்து செல்லவே "நான் இதில் அமரலாமா?"என்றான். தட்டுத்தடுமாறி "ஓகே"என்றாள் அவள். பயணம் நீண்டுகொண்டேபோனது. ஜன்னலுக்கு வெளியே காட்சிகள் மாறிக்கொண்டே இருந்தன. அவள் அமைதியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். அவ்வப்போது அவள் அவனைப் பார்ப்பதும் அவன் அவளைப் பார்ப்பதும் என்று போய்க்கொண்டிருந்தது. ஆனால் இருவருக்குள்ளும் எந்தவித பேச்சும் எழவில்லை.

திடீரென்று திரும்பி அவள் அவனைப் பார்த்தாள். "நன்றி"என்றாள் மெல்லிய குரலில். அவன் புன்னகைத்தான் "அது ஒன்றுமில்லை" என்றான். இருவருக்குள்ளும் ஒருவிதமான அச்சம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்தும் ஏதும் பேசிக் கொள்ளாமல் கல்லூரிக் காலத்தில் செய்த அதே தவறை மீண்டும் செய்துவிடுவோமோ என்ற பயம்.

"நீங்கள் தற்போது என்ன செய்கின்றீர்கள்?"என்று ஆரம்பித்தாள் அவள். அவளாகவே பேசப் புறப்பட்ட குதூகலத்தில் அவன் "நான் ஒரு அலுவலகத்தில் மனேஜராகப் பணிபுரிகின்றேன். இன்னும் எனக்கு திருமணம் ஆகவில்லை" என்றான் கேட்காமலேயே.

அதுவரை காலமும் இன்பம் என்ற சொல்லையே அனுபவிக்காத அவளது நெஞ்சம் ஒரு நிமிடம் செய்வதறியாது திகைத்துநின்றது.

அவளுக்கும் இன்னும் வயது கடந்தும் திருமணம் ஆகவில்லை. நீண்ட இடைவெளியின் பின் ஒருதலையாக காதலித்தவனே மீண்டும் வரம் அளிப்பதற்காக வந்தது போல் தோன்றியது அவளுக்கு. "கடவுளுக்கு இன்றுதான் எனது எண்ணம் காதில் கேட்டதா?" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டாள்"அவள். இத்தனை திருவிளையாடல்களும் இந்த ஒரு தருணத்திற்காகத்தானா ?"என்று ஒரு கணம் பூரிப்படைந்தாள். இவ்வாறு இருவரின் உரையாடலும் சுவாரஸ்யமாகத் தொடர்ந்துகொண்டிருந்தது. இருவரும் ஒரு நிலைக்கு வந்தார்கள்.

அவளது பேச்சில் இருந்த கனிவும் அவளது பார்வையில் இருந்த அன்பும் அவனை மெல்ல மெல்ல முதன்முதலாக அவளைப் பார்த்த நாளுக்குக் கொண்டுசென்றது. இவ்வாறு நடந்தவற்றை நீட்டிக்கொண்டிருக்கும் பொழுதிலே "நான் இன்னும் உன்னைத்தான் காதலித்துக்கொண்டிருக்கின்றேன்" என்றான் சட்டென்று. அவளோ இதைக் கேட்டதும் வெட்கத்தால் தன்னைப் போர்த்திக்கொண்டாள். அவள் அவனது கண்களை ஆழமாகப் பார்த்தாள். அவளது உதடுகளில் ஒரு மெல்லிய புன்னகை அரும்பியது. "எனக்கும் உங்களைப் பிடித்திருக்கின்றது" என்றாள் மெதுவாக. காலங்கள் கடந்தாலும் அவளுக்கான காதல் அவளையே வந்தடைந்துவிட்டது அந்த நாளில்....

அவனது முகத்தில் ஆயிரம் நிலவுகள் ஒருசேர ஒளிர்ந்தது போல் இருந்தது. பேருந்தின் இரைச்சலையும் மீறி அவனது காதுகளில் அவளது அந்த இரண்டு வார்த்தைகள் தேனாக ஒலித்தன. அப்போது இருவரும் உணர்ந்துகொண்டார்கள். அன்று அந்தப் பேருந்தில்அவன் அவளுக்கு வெறும் ஜன்னலோரம் மட்டுமல்ல அவனது வாழ்க்கையின் அழகான ஆரம்பமுங்கூட என்று. இருவருக்குமான நெருக்கம் மிகும் முன்னரே அவன் இறங்கவேண்டிய நிலையம் வந்துவிட்டது. இறங்கத் தயாராக எழுந்துநின்றான். கூடவே அவளும் எழுந்து வழியனுப்பி வைப்பதற்காகத் தயாரானாள். அவன் பிரிய மனமில்லாமல் அவளின் கைகளை மெதுவாகத் தழுவியபடி விடைபெற்றான் புன்னகையோடு. அவன் இறங்கியதும் அவனது தொலைபேசி இலக்கத்தைச் சேமிப்பதற்காக தனது தொலைபேசியை கையில் எடுத்தாள்.



திடீரென ஒரு சத்தம். வீதியில் அனைவரும் கூடினர். யாரோ லொறியில் அடிபட்டுவிட்டனர். ஒரு கணம் மௌனித்தாள். திகைத்து நின்றாள். அதற்குள் கடவுள் தனது திருவிளையாடலை மீண்டும் நீங்கா நினைவாக வரமளித்துவிட்டார். வரமா?????? சாபம்........

ஆம் விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தவன் யாருமில்லை, அவளது அவன்தான்...........

'நீ எனக்கு வெறும் ஜன்னலோர இருக்கையாக மட்டும் இருந்திருக்கலாமே......இன்று அந்த அரைமணி நேர பயணம்கூட சாபமாக மாறிவிட்டதே........!'

அவளுக்கு இப்போது ஜன்னலோர இருக்கை கிடைத்தாலும் அதில் அமர்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிங்கமும் சிறு எலியும்



ஒரு நாள் மதியவேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக்கொண்டு இருந்தது.

அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது.

இதனால் சிங்கம் விழித்தெழுந்தது. கோபம்கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, "நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாகப் போகிறாய்" என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ! சிங்கத்திடம், "என்னை மன்னித்துவிடுங்கள் நான் தெரியாமல் உங்கள் மீது ஏறிவிட்டேன். என்னைச் சாப்பிடாதீர்கள்" எனக் கெஞ்சிக் கேட்டது.

சிங்கத்திடம் "இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றாவது ஒரு நாள் உங்களுக்கு என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்" என்றது.

சிங்கமோ, "இவ்வளவு சிறிய உடம்பை வைத்துகொண்டு எனக்கு நீ உதவப் போகிறாயா?" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போகவிட்டது.

சில நாள்களின் பின் சிறிய இறைச்சித் துண்டிற்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிகொண்டது. வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது.

அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப்போக உதவியது. சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

**நீதி: உருவத்தை பார்த்து யாரையும் ஏளனம் செய்யக்கூடாது.**



வெலிற்றர்
விரித்திகன்
தரம்- 6
யா /புனித
பத்திரிசியார் கல்லூரி



ம. நேருயன்
தரம்-7
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி


## ஒத்தகருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அன்பு - நேயம் | அகந்தை - செருக்கு | அணங்கு - தெய்வப்பெண் |
| அங்காடி - சந்தை | அறிவுரை - புத்திமதி | அதரம் - உதடு |
| அகதி - கதியற்றவன் | அனுகூலம் - நன்மை | அந்தம் - முடிவு |
| அசதி - அயர்ச்சி | அன்பளிப்பு - நன்கொடை | அகம் - உள்ளம் |
| அச்சம் - பயம் | அற்புதம் - புதுமை | அக்கினி - நெருப்பு |
| அருவி - ஆறு | அஞ்சலி - வணக்கம் | அழகு - எழில் |
| அந்தகாரம் - இருள் | அடவி - காடு | அபாயம் - ஆபத்து |
| அண்மை - சமீபம்/ அருகு | அடிசில் - உணவு | அமர் -போர் |



ர.பௌசித்திரன்
தரம்-7
யா/இந்துக் கல்லூரி

## ஆங்கிலம் அறிவோம்






மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



ச.சந்தோஷி
தரம் - 8D
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org